நாற்பேருண்மைகளை உய்த்துணர்ந்து கொள்வதற்கான தர்ம போதனைகள்

# உன்னதமான தலைமைத்துவத்தை
# தெரிவு செய்வோம்

கௌரவமிகு கிரிபத்கொடை ஞானானந்த தேரர்

நாற்பேருண்மைகளை உய்த்துணர்ந்து கொள்வதற்கான தர்ம போதனைகள்

# உன்னதமான தலைமைத்துவத்தை தெரிவு செய்வோம்

கிரிபத்கொடை ஞானானந்த தேரர்

முதலாம் பதிப்பு 2014 வருடம்.

© 2014 All rights Reserved. Shraddha Media Network |www. tamilbuddhist.com
Tel: 0112 571 471 | e-mail : shraddhatv@gmail.com

Contact us,
Website: www.tamilbuddhist.com
facebook: Tamil Buddhist
Phone: (+94)0775554874
skype: uwusri
E-mail :uwusri@gmail.com

# உன்னதமான தலைமைத்துவத்தை தெரிவு செய்வோம்

**கௌரவமிகு கிரிபத்கொடை ஞானானந்த தேரர்**

நிகழ்த்திய தர்ம போதனைகளிலிருந்து
தெரிவு செய்யப்பட்டதாகும்.

**- மொழிபெயர்ப்பு -**

திருமதி. கௌரி மல்லவாரச்சி

**விசேட நன்றிகள்**

திரு. திஸ்ஸ மல்லவாரச்சி ,திருமதி ரஞ்சனி மற்றும் திரு. சிந்தக அவர்களுக்கு உரித்தாகட்டும்.

# உள்ளடக்கம்.


01. உன்னதமான தலைமைத்துவத்தை தெரிவு செய்வோம். - 07

02. உன்னதமான தலைமைத்துவத்தின் செயற்பாடு - 41

03. உன்னதமான தலைமைத்துவத்தின் செயற்பாட்டினை மனதினூடாக செயற்படுத்துவோம். - 82

**சப்ப பாபஸ்ஸ அகரணங்  – குசலஸ்ஸ உபசம்பதா**
**சசித்த பரியோதபனங் – ஏதங் புத்தான சாசனங்**

“சகல பாவங்களையும் செய்யாதிருத்தல், நல்லறத்தையே செய்தல் மற்றும் மனதை தூய்மை படுத்தல் இவையே அனைத்து புத்தர்மார்களதும் போதனையாகும்.”

*நமோ தஸ்ஸ பகவதோ அரஹதோ சம்மாசம்புத்தஸ்ஸ*
அந்த பாக்கியமுள்ள அரஹத் சம்மாசம்புத்த பகவானுக்கு எனது நமஸ்காரமாகட்டும்!

# 01.

# உன்னதமான தலைமைத்துவத்தை தெரிவு செய்வோம்.

**புண்ணியவர்களே!**

இன்று நாம் அனைவரும் இங்கு கூடியிருப்பது ஏனென்றால் எம் உள்ளங்களிலுள்ள குறைபாடுகளை நிவர்த்தி செய்து கொள்ள உறுதுணையாக இருக்கும் தர்ம போதனைகளை செவிமடுப்பதற்கே. எம் மனதில் உள்ள குறைபாடுகள் என்ன? பலவீனங்கள் தான் என்ன?

**கோபம்**

எம் அனைவருக்கும் கோபம் வருகிறதல்லவா? ஆம், நாம் அனைவரும் சினங்கொள்கிறோம். அதே போல் இன்னுமொருவரால் எம்மை கோபமடையச்செய்யவும் முடியும். ஏன் இவ்வாறு நடக்கிறது? இப்படி நடக்க காரணம் கோபமடையும் இயல்பினை உடைய மனம்

எம்முள் இருப்பதே. நாம் கோபத்தை தொடர்ந்தும் பழக்கப்படுத்தி வந்தால் காலப்போக்கில் அதுவே பகைமையாக மாறிவிடுகிறது. இந்த பகைமை குணத்தினால் பழிவாங்கும் எண்ணம் உருவாகிறது. இந்த கீழ்தரமான குணத்தினால் எமக்கும் எம்மை சூழ உள்ளவர்களுக்கும் அழிவே ஏற்படும். அப்படியானால் கோபம் என்பது எங்களின் மனதில் உள்ள ஒரு குறைபாடாகும். ஒரு பலவீனமாகும்

**ஆசை**

எம் அனைவருக்கும் ஆசை உண்டாகிறதல்லவா? தொலைக்காட்சியை பார்ப்பதால் சில பத்திரிக்கைகளை வாசிப்பதால் எம் மனதில் இதுவரைக்கும் இல்லாத புது வித ஆசைகள் தோன்றுகிறதல்லவா? இவ்வகையான ஆசைகளினால் மனிதர்கள் ஆச்சரியமூட்டும் வகையில் பாவங்கள் செய்கிறார்கள். ஆசையை அடிப்படையாக கொண்டு ஏனையோரை வஞ்சிக்கின்றனர். அதனாலயே தம் வாழ்வையும் இருளடையச்செய்து கொள்கின்றனர். பாவம் செய்யாமலிருக்க உதவும் வெட்கம், பயம் என்பவற்றை முழுமையாக அழித்து கொள்கின்றனர். ஆசைக்கு அடிமையாகிய பின் தாம் எங்கிருக்கிறோம் என்பதையே மறந்து விடுகின்றனர். பாவ புண்ணியங்களை மறக்கின்றனர். பாவ புண்ணியங்கள் மீதான நம்பிக்கையை இழந்து விடுகின்றனர். இவ்வனைத்திற்கும் காரணம் மனதிலுள்ள ஆசையே! ஆசையினால் கண்மூடித்தனமாக நடக்கிறோம். இப்படியான கண்மூடித்தனமான ஆசை எம்முள் இருப்பதால் தான் அல்லல் படும் வாழ்க்கை எமக்கு சொந்தமாகியுள்ளது.

## ஏமாற்றம் அல்லது அறியாமை

ஏனையோரால் நாம் ஏமாற்றப்படுகிறோம் அல்லவா? ஒரு விடயத்தை விளங்கி கொள்ள முடியாத தன்மை எம் உள்ளத்தில் இருப்பதால் தான் இன்னுமொருவரால் எம்மை ஏமாற்ற முடிகிறது. ஒருவர் எமக்கு சரியான முறையில் அவ்விடயங்களை கற்று கொடுத்தால் எம்மை யாராலும் ஏமாற்ற முடியாது.

## இவை இருக்கும் வரை நிம்மதி இல்லை.

மேற்கூறப்பட்ட இம்மூன்று பலவீனங்கள் இருக்கும்வரை ஒருவருக்கு நிரந்தரமான நிம்மதி கிட்டாது. எமது அறியாமையால் சில விடயங்கள் எம்மால் நிம்மதி போன்று உணரப்பட்டாலும் அவை தொடர்ந்தும் எமக்கு நிம்மதியை தராது. அதற்கு காரணம் நிலையில்லாமையே. வேட்கை, கோபம் அறியாமை என்பன எம் மனதில் இருக்கும் வரை நிரந்தரமான நிம்மதி ஏற்படாது. பலவீனத்தை தரும் இம்மூன்று மனவழுக்குகளும் எம் மனதில் இருக்கும் வரை அவை துன்பத்தையே தரும்.

## தெரிவு செய்வதும் இதே குறைபாடுகளை உடையதொரு தலைமைத்துவத்தையா ?

பாருங்கள், இதே பலவீனங்களை கொண்ட தலைமைத்துவத்தை தெரிவு செய்வதால் எமக்கு என்ன நன்மை ஏற்படபோகிறது? எமக்கு நிரந்தரமான நிம்மதி விடுதலை கிடைக்க வேண்டுமாயின் நாம் பின்பற்ற வேண்டியது, இந்த ஆசை, கோபம், அறியாமை என்பன நீக்கிய பரிசுத்தமான உள்ளத்தை கொண்ட ஒருவரை என்றால் அது மிகையாகாது.

## இவ்வுலகில் அவ்வாறான தலைமைத்துவம் ஒன்று உள்ளதா?

"கௌதம சித்தார்த்த" எனும் பெயருடைய ஒரு அரசகுமரன், தனது இருபத்தொன்பதாவது வயதில் இல்லறம் விடுத்து துறவறம் பூண்டார். மனத்தை தூய்மை படுத்துவதற்கே அறும்பாடுபட்டார். ஈற்றிலே குரு உபதேசமின்றி தன் சுயஞானத்தினாலயே அனைத்து மனமாசுகளையும் அழித்து பரிசுத்தமான நிலையை அடைந்தார். இப்படியான ஒருவரை பற்றி எமக்கு தெரியும். ஆம் அவரே "கௌதம புத்த பகவான்" நாம் "புத்தங் சரணங் கச்சாமி" என சரணடைந்த உத்தமரே அவராவார்.

## நாம் சரியாக சிந்தித்து பார்த்துதானா எமது ஆன்மீக தலைவரை தெரிவு செய்தோம்?

நாங்கள் புத்த பகவானை சரணடைந்தது, எம் பெற்றோர்கள் பௌத்தர்கள் என்பதாலயோ அல்லது எமக்கு வேண்டியவர்கள் பௌத்தர்கள் என்பதாலயோ இருந்தால் அது பயனற்றதாகும். நாம் புத்த பகவானை சரணடையவேண்டியது நன்றாக சிந்தித்து ஆராய்ந்து பார்த்து முழுமையான புரிந்துணர்வுடனையே!

இவ்வுலகத்தில் எல்லோரும் சரணடைந்த ஏனைய ஆன்மீக தலைவர்களாகட்டும் அல்லது தெய்வங்களாகட்டும் அவ்வனைவரும் மனவழுக்ககளை முழுமையாக நீக்காதவர்களே! அதேபோல் பற்றுக்களுக்கு உட்பட்டவர்களே!

## கண்ணீரை நிறுத்த கூடிய உன்னத தலைவர்

புத்த பகவான் இவ்வுலகத்தோரை பார்த்து

கண்ணீர் விடவில்லை. மரணித்தவர்களை பார்த்து அழவில்லை. புத்த பகவான் துக்கமடையவில்லை. கண்ணீரை அனுமதிக்கவில்லை. அவர் கண்ணீர் சிந்துபவர்களிடம் சென்று "கண்ணீர் வருவதற்கு காரணம் மனதிலுள்ளது. அக்காரணத்திலிருந்து விடுதலையடையுங்கள். அவ்வாறு விடுதலையடைந்தால் ஒரு நாளும் கண்ணீர் விடவேண்டியதில்லை" என மொழிந்தார். உண்மையிலையே இவ்வாறுதான் கண்ணீரை நிறுத்த வேண்டியுள்ளது. அவ்வாறில்லாமல் மனிதர்கள் கண்ணீர் விட்டு சோகமடைகையில் நாமும் சேர்ந்து அழுதோமேயானால் சோகம் மேலும் மேலும் கூடுமல்லவா? "ஐய்யோ! இந்த பிக்குவே சோகம் தாங்க முடியாது அழுகிறாரே. நாம் ஏன் கவலையுறாமல் இருக்க வேண்டும்?" என எல்லோரும் சத்தமிட்டு அழுவோம். இப்படிபட்ட தலைவரா எமக்கு வேண்டும்? என சிந்தித்து பாருங்கள்.

எங்களுடைய அழுகையை சோகத்தை நிறுத்தகூடிய தலைவரே அவசியமானவர். புத்த பகவான் இதைத்தான் செய்தார். சரணடைய வேண்டியது இவ்வாறான ஒருவரைத்தான் இதை நாங்கள் தெளிவான அறிவோடு செய்யவேண்டியதொன்றாகும்.

## பிரச்சினை வரும் போது ஓடி ஒழியாத ஒருவராக வேண்டும்

நாம் சரணடையும் அந்த ஆன்மீக தலைவரானவரின் வாழ்வானது அனைத்து உயிர்களுக்கும் முன்மாதிரியாக இருக்க வேண்டும். அந்த தலைமையானது பிரச்சினைகளை கண்டு ஓடி ஒழிந்தால் பிரச்சினைகளை கண்டு பயமடைந்தால் வரும் சவால்களுக்கு முகம்

கொடுக்க முடியாது தவித்தால், அவ்வாறான தலைமைத்துவத்தின் பயன்தான் என்ன? இவ்வாறான தலைமைத்துவத்தை பின்பற்றும் ஒருவருக்கு சிறப்பான ஆளுமைத்திறனை பெற்று கொள்ள முடியாது.

## அவ்வாறாயின் நாம் தெரிவு செய்து கொள்ள வேண்டியது

பிரச்சினைகளை பற்றி அறிந்து கொள்ள கூடிய சக்தியை கொண்ட பிர்ச்சினைகளுக்கு முகங்கொடுக்க கூடிய, பிரச்சினைகளை கண்டு ஓடி ஒழியாத, ஒரு தலைமைத்துவத்தை தான் தெரிவு செய்ய வேண்டும். சத்தியத்தின் முன்னால் அசத்தியம் ஒழிந்து விடும். சத்தியமே உருவான புத்த பகவானின் முன் அசத்தியம் வெற்றிகொண்டதாக இல்லை. எம் பகவானிடம் சத்தியம், திறமை, ஆற்றல், பலம் என்பன குடிகொண்டிருந்தன. ஒரு சாதாரண மனிதனிடம் இவ்வனைத்து குணங்களும் இருந்ததென்றால் பெரும்பாலானவர்கள் தவறான பாதையிலே பயணிப்பார்கள். அதற்கான காரணம் தான் உள்ளத்தின் அசுத்தம். புத்த பகவான் அப்படிப்பட்டவர் அல்ல. நாம் எமது ஆன்மீக தலைவராக தெரிவு செய்ய வேண்டியவர் உள்ளத் தூய்மையுடையவராதல் அவசியம். இதனை அறிவால் நன்கு ஆராய்ந்து தான் தெரிவு செய்ய வேண்டும். அதற்கான இலட்சணங்களையும் அறிந்திருத்தல் அவசியம்.

அதனடிப்படையில் புத்த பகவான் யாரென்பதை அறிந்து கொள்ள அவரின் ஒன்பது குணங்கள் என்ன என்பதை தெரிந்து கொள்ளுதல் அவசியமாகும். *“இத்திபி சோ பகவா அரஹங் சம்மா சம்புத்தோ*

*விஜ்ஜாச்சரண சம்பண்ணோ சுகதோ லோக்கவிதூ அனுத்தரோ புரிசதம்ம சாரதீ ஸத்தா தேவ மனுஸ்ஸ ானங் புத்தோ பகவா”* எனும் செய்யுளின் முதலாவது குணம்தான் ‘அரஹங்’ இதன் பொருள் தான் மனத்தை அழுக்கடையச்செய்யும் ஆசை, கோபம், அறியாமை எனும் மூன்று மன அழுக்குகளையும் அதன் படிவுகளையும் முற்றாக நீக்கியவர் என பொருள்படும்.

## தன் சுய ஞானத்தால் நாற்பேருண்மைகளை உய்த்தறிந்தார்

ஆன்மீக தலைமைத்துவத்தை தேர்ந்தெடுக்கையில் அவ்வாறு தெரிவு செய்யப்படும் அந்த தலைவர் “நான் இன்னுமொருவரிடம் கற்றுகொண்டேன்” என்று கூறினால் அவர் சீடராவார். அவரை விட அது தொடர்பான அறிவு அவரின் குருவிடம் இருக்கலாம். அதனால் அவ்வாறானவரின் அறிவு பூரணமானது, என்று கூறமுடியாது. புத்த பகவானின் குரு யார்? தானே தான். எம்பெருமான் தன் சிந்தையை பயன்படுத்தியே மாற்றமுறாத உன்னதமான சத்தியங்களை உய்த்தறிந்தார். புத்தபகவான் பரிணிர்வானம் அடைந்து 2558 ஆகியும் அவர் போல் ஒருவர் இன்னும் பிறக்கவில்லை. தன்னை ஆன்மீக தலைவர்களாக கூறும் பலர் தோன்றினாலும் அவர்களை புத்த பகவானுடன் ஒப்பிட முடியாது. இன்றுவரை புத்த பகவானை தவிர தன்னுடைய சுய ஞானத்தால் எல்லாவற்றையம் உய்த்தறிந்த எவரும் இல்லை. அதனாலயே அந்த பாக்கியமுள்ளவர், ‘சம்மா சம்புத்த’ எனும் குணங்கொண்டவராக திகழ்கிறார்.

**புற மற்றும் உள்ளக உலகங்களை பூரணமாக உய்த்தறிந்தார்.**

புத்த பகவான் சுயஞானத்தால் உய்த்தறிந்து கொண்ட ஞானம் அளவிடமுடியாது. நாம் காணும் இவ்வுலகமானது வரையறுக்கப்பட்டதாகும்.

நாம், ‘உலகம்’ அல்லது ‘சூரிய குடும்பம்’ எனும் போது எம் அறிவுக்கு எட்டுவது எமது பூமியும் இன்னும் விரல் விட்டு எண்ண கூடிய சில கிரகங்கள் மாத்திரமே! ஆனால் புத்த பகவானின் ஞானமானது வரையறுக்கப்பட்டதல்ல.

கௌதம புத்த பகவானை போன்றே இன்னும் பல புத்தர்மார்கள் ஆதியில் தோன்றியுள்ளனர். அவ்வாறான ஒரு சம்புத்த பகவான்தான் ‘கக்குசந்த’ எனகூறப்படுபவர். புத்த பகவானை தவிர வேறு யாரலும் இதனை அறிந்து கொள்ள முடியவில்லை.

புத்த பகவான் தன்னுடைய சீடர்களுள் ஒருவரான ஆனந்த சுவாமியிடம் இப்படியாக மொழிந்தார்.

“புண்ணியமிகு ஆனந்த! பல்லாயிரம் கல்பங்களுக்கு முன்னர் ‘கக்குசந்த’ எனும் பெயரில் புத்த பகவான் ஒருவர் தோன்றியிருந்தார். அவருக்கு ‘அபிபூ’ எனும் பெயரில் சீடர் ஒருவரிருந்தார். அந்த சீடருக்கு பிற உலகங்களுடன் பேசும் ஆற்றலிருந்தது.” என புத்த பகவான் மொழிந்ததும், ஆனந்த பிக்கு இவ்வாறு வினவினார். “பகவானே இப்படியாக ஒருவருக்கு வேற்று கிரகங்களோடு பேச முடியுமானால் பாக்கியமுள்ள பகவானுக்கு எத்தனை உலகங்களுக்கு விளங்க பேச முடியும்?” எனக்கேட்டார்.

அதற்கு புத்த பகவான் “புண்ணியமிகு ஆனந்த புத்த பகவானின் வல்லமையை அளவிட முடியாது.” எனக்கூறவும் மீண்டும் ஆனந்த பிக்கு “புண்ணியப்பெருங்கடலே நான் பகவானால் எத்தனை உலகங்களுக்கு பேச முடியும் என்பதனை அறிய மிகுந்த ஆவலாய் உள்ளேன்” என கூற புத்த பகவானிடம் இருந்து அதே பதில்தான் கிடைத்தது. மூன்றாவது முறையாகவும் ஆனந்த பிக்கு கேட்டதும் புத்த பகவான் இவ்வாறு மொழிந்தார்.

“அப்படியாயின் ஆனந்த நன்றாக செவிமடுங்கள். சந்திர சூரியனை கொண்டியங்கும் கிரக மண்டலங்கள் தான் ‘ஸஹஸ்ரீ’ உலக மண்டலமாகும். இவ்வகையான ஆயிரம் ஸஹஸ்ரீ மண்டலங்கள் ‘ஸஹஸ்ரீ சூலநிக்கா’ உலக மண்டலமாகும். ஸஹஸ்ரீ சூலநிக்கா மண்டலங்கள் ஆயிரம் ‘துவிஸஹஸ்ஸீ மஜ்ஜிமா’ உலக மண்டலமாகும். துவிஸஹஸ்ஸீ மஜ்ஜிமா உலக மண்டலங்கள் ஆயிரம் தான் ‘திஸஹஸீ மஹாஸஹஸ்ஸீ ’உலக மண்டலமாகும். அவ்வுலகங்கள் வரை என்னால் தர்மத்தை போதிக்க முடியும். அதற்காக நான் செய்வது முதலில் ஒளியை அனுப்பி அதன் பின் ஒலி அலைகளை செலுத்துவதாகும்” என மொழிந்தார்.

பாருங்கள், இந்த விளக்கங்களை கூறியவர் இற்றைக்கு 2558 வருடங்களுக்கு முன் சுந்தரமான பரிணிர்வானத்தை அடைந்த பரிபூரணமான ஞானத்தையே தனது ஒளியாக கொண்ட எமது பரமகுரு ஆவார். இன்றும் விஞ்ஞானிகளால் இவற்றை கண்டுபிடிக்க முடிந்ததா? இப்போது எம்மால் சற்றேனும் சம்மா சம்புத்த பகவானின் ஞானத்தை உணரக்கூடியதாக

உள்ளது. இப்படியான ஒப்பற்ற ஞானத்துடன் இன்னுமொருவர் இவ்வுலகத்தில் தோன்றினாரா? எவ்விதமான புற ஆதாரங்களும் இல்லாமல் தன் விருத்தியடைந்த மனத்தை மாத்திரம் பயன்படுத்தி உய்த்தறியப்பட்ட ஞானம் விந்தையானதல்லவா? தற்போதைய விஞ்ஞானம் பற்பல புதுமை நிரம்பிய விடயங்களை கணடுபிடிக்கிறது, என நாம் நினைக்க காரணம் இவ்விடயங்கள் அறியாததால் தானே? இப்போதனை 'அங்குத்தர நிக்காயம்' எனும் புனித நூலில் அடங்கியுள்ளது.

## பரிபூரணமான ஒருவரையே சரணடைய வேண்டும்.

மனிதன் சரணடைய வேண்டியது, முழுமையான ஒருவரையே அன்றி குறைபாடுள்ள ஒருவரையல்ல. பகவான் உள்ளத்தால் தூய்மையானவர். ஞானத்தின் உறைவிடமாகியவர். குரு ஒருவருக்கு இருக்க வேண்டிய அனைத்து தகுதிகளும் புத்த பகவானிடத்திலே இருந்தது. எமக்கு வழிகாட்டியாக முன்மாதிரியாக இருக்க வேண்டிய எமது தலைமைத்துவமானது இப்படிப்பட்டதாகவே இருக்க வேண்டும். நாம் பிறந்தது இப்பேர்ப்பட்ட உத்தமரை பற்றி, அவரின் தர்மத்தை பற்றி உரையாடுகின்ற ஒரு காலமாக இருப்பது எமது அதிஷ்டமாகும். *"புத்தங் சரணங் கச்சாமி"* என சொல்லி சரணடையும் போது அது தொடர்பான விளக்கம் இல்லாவிடில் நம்பிக்கையுடன் கூடிய பக்தியானது நிலையாது. அதேபோல் புத்த பகவானை முழுமையாக அறிந்து கொள்ளாமல் 'புத்தங் சரணங் கச்சாமி' என்று சொன்னால் அது புத்த பகவானுக்கு செய்யும் அகௌரவமாகும்.

ஒருவர் வந்து எம்மிடம் சொன்னால் "அந்த கோயிலுக்கு சென்று வேண்டுங்கள், அந்த கோயிலுக்கு போனால் உமது காரியம் கைகூடும்" என்று நாம் அங்கு செல்வதில்லையா? ஏன் நாம் அவ்வாறு செல்கிறோம்? எம் ஆன்மீக தலைமைத்துவத்தை சரியாக அறிந்து கொள்ளாமையே இதற்கு காரணமாகும். இது கண்ணில்லா குருடரின் செயல் போலாகிறது.

## எல்லா இடங்களுக்கும் நாம் செல்வது கண்மூடித்தனத்தினால்தான்

கண் தெரியாத ஒருவருக்கு ஓரிடத்திற்கு செல்லும் அவசியம் ஏற்படுகிறது. ஒருவர் அவரிடம் ஊன்றுகோலை கொடுத்து அவர் செல்ல வேண்டிய திசைபக்கம் திருப்பி விடுவார். அவர் ஒருவாராக அவ்விடத்திற்கு செல்லும் போது இன்னுமொருவர் 'இந்த பக்கமாக செல்லுங்கள்' என திசையை மாற்றி விடுவார். இன்னொருவர், 'இதுவல்ல அந்த திசை' என வேறு திசையை காட்டுவார். இப்படி நடக்க காரணம் அவருக்கு கண்கள் புலனாகாத காரணத்தினாலயே. கண்கள் புலப்படுபாயின் அவர் சரியான இடத்தை அடைந்திருப்பார். தன்னை பௌத்தனாக கூறிக்கொள்ளும் சிலர் இப்படி குருடர்கள் போல் ஒவ்வொரு திசையில் செல்வார்கள். மூட நம்பிக்கைகளை நம்புவார்கள். மூட நம்பிக்கைகளிலிருந்து கொண்டு புத்த பகவானை சரணடைவார்கள். தாம் சரணடைந்தவர் யாரென்பதே தெரியாத பௌத்தர்கள் இருக்கிறார்கள். இது ஒரு துரதிஷ்டமான விடயமாகும். ஆனால் முழுமையான புரிந்துணர்வுடன் ஒருவர் சரணடைந்தால் அவருக்கு தெரியும் தான் சரணடைந்தவர் யார் என்று. அவரின் சரியான தெரிவை இட்டு அவர் மகிழ்ச்சி கொள்வார்.

## ஆராய்ந்து தெரிவு செய்தல் அவசியம்

இவ்வாறு நாம் சிந்தித்து பார்ப்போம், நாம் கடை ஒன்றில் ஒரு பொருளை கொள்வனவு செய்ய போகிறோம். ஒரு மரத்தளபாடம் என்று நினைப்போமே. உக்கிய கறையான் பிடித்த, அமர்ந்தால் உடைந்து விழக்கூடிய பொருளை நாம் வாங்க விரும்புவோமா? நாம் பார்ப்பது, நீண்ட காலம் பாவனை செய்ய கூடிய உறுதியான பலம் நிறைந்த மரதளபாடத்தைதான். ஆடை கொள்வனவு செய்யும் போது தையல் பிரியாத , நூல் இழுபடாத துணியை கொண்ட ஆடையை தான் தெரிவு செய்வோம். தேங்காய் கொள்வனவு செய்யப்போனால் கூட அந்த தேங்காய் அழுகாத , காய்ந்திராத ஒன்றா என கவனிப்போம். ஒரு பொருளை கொள்வனவு செய்யும் போது இவ்வளவு விடயங்களை ஆராயும் நாம் எம்மால் செய்யப்படும் பெரும்பாலான விடயங்களுக்கு நேரடியாகவோ மறைமுகமாகவோ தாக்கம் செலுத்தும் சமயத்தை தெரிவு செய்கையில் எவ்வளவு ஆராய்ந்து பார்க்க வேண்டும் என்பதனை மறந்து விடுகிறோம்.

நாம் பின்பற்ற போகும் சமயத்தை தெரிவு செய்கையில் அறிவால் நன்கு பகுப்பாய்வு செய்ய வேண்டும். நான் இவ்வாறு கூறுவது பௌத்தர்களுக்கு மாத்திரம் இல்லை. பொதுவாக அறிவுள்ள அனைத்து மக்களுக்கும்தான். மனிதர்கள் இவ்வாறு தான் சமயத்தை தெரிவு செய்ய வேண்டும். அவ்வாறில்லாது கண்கள் தெரியாத குருடனை போல் சமயத்தை தெரிவு செய்தால் தடி செல்லும் திசையிலே பயணிக்க வேண்டியதாக இருக்கும். இப்படியாக சமயத்தை

பின்பற்றும் போது ஒருவருக்கு எவ்விதமான தீர்வும் கிடைக்காது.

## சரியான தலைமைத்துவத்தை தெரிவு செய்ய புத்தி கூர்மை வேண்டும்.

முதலில் கூறியது போன்று பொருளொன்றை வாங்கும் போது ஆராய்ந்து தான் வாங்குவோம். தரம் குறைந்த பொருட்களை வாங்க யாரும் விரும்புவதில்லை. அதே போல் வாழ்விற்கு உபயோகமில்லாத சமயத்தை கடைபிடிக்கவும் யாரும் விரும்பமாட்டார்கள். வாழ்விற்கு உபயோகமற்ற ஒருவரை சரணடைய யாரும் விரும்ப மாட்டார்கள். இப்படியாக பிழையற்ற சமயத்தை தெரிவுசெய்ய புத்தியில்லாததால் தான் மனிதர்களுக்கு பிரச்சினைகள் அதிகரித்து உள்ளது. தரம் குறைந்த பொருளை விற்கும் ஒருவர் “வாருங்கள் தரம் குறைவான இந்த பொருட்களை வாங்கி செல்லுங்கள்” என கூறுவாரா? அவர் பார்ப்பது எப்படியாவது பொய் வருணனைகள் செய்து ஏமாற்றி அப்பொருளை யாரிடமாவது விற்றுவிடுவதற்கே. இன்றைய உலகத்திலுள்ள சமயங்கள் இப்படிப்பட்டவையே. எவ்வாறு சுயாதீனமாக ஒரு சமயத்தை பின்பற்ற வேண்டும் எனக்கூற மாட்டார்கள். நாம் அதனை கூறவில்லை, மாறாக தெரிவு செய்யும் விதத்தையே கூறுகின்றோம். தெரிவு செய்யும் முறை தெரிந்துவிடின் ஒருவரால் சரி எது? பிழை எது? எனும் அறிவு கிட்டும். அந்த அறிவில்லாவிடில் பிழையானதையே தெரிவு செய்யும் துர்ப்பாக்கிய நிலை உருவாகிறது.

சில வருடங்களுக்கு முன் எம் நாட்டிற்கு தொடர்ந்தும் ‘அன்டனோ’ எனும் விமான வகை கொள்வனவு செய்யப்பட்டது. அவையெல்லாம் குறைவான காலத்திலே உடைந்து விட்டன. அதற்கு காரணம் பொருளொன்றை கொள்வனவு செய்வதற்குரிய அறிவின்மையே ஆகும். அமெரிக்கர்களிடம் ஒரு விமானத்தை தெரிவு செய்ய விடுத்தால் தரம் குறைந்ததை தெரிவு செய்ய மாட்டார்கள். இப்படியான இயந்திர பொருட்களை தெரிவு செய்வதற்குரிய அறிவு அவர்களிடம் இருப்பதே அதற்கு காரணமாகும். அவர்கள் அவ்வியந்திர பொருட்கள் தொடர்பாக கற்றுள்ளனர். அதேபோல் நாமும் எமது ஆன்மீக தலைவரை தெரிவு செய்யும் முறையை கற்று கொண்டால் மிகச்சரியான தலைமைத்துவத்தை எம்மால் தேர்ந்தெடுக்க முடியும். அப்போது தான் பாரபட்சமின்றி ஆராய்ந்து பார்க்க முடியும். உலகில் வாழ்ந்த, வாழும் சமயத்தலைவர்களின் நடத்தைகள் எப்படிப்பட்டவை? என்பன ஆராய வேண்டும். அதேபோல் ஒருவர் உள்ளார்ந்தமாக சிதைந்து போன வறலாற்றினையுடைய ஒரு சமய தலைவரை தன் ஆன்மீக தலைவராக தெரிவு செய்யமாட்டார். தன் இவ்வாழ்வு மற்றும் மறுவாழ்வை சுமுகமாகக்கும் முறையை கூறும் தன் வாழ்வினை முன்னேற்ற பாதையில் செலுத்த கூடிய தலைவரையே தன் ஆன்மீக தலைவராக தெரிவு செய்வார். அவரையே பின்பற்றுவார்.

**எவ்வித கலங்கமுமற்ற ஒழுக்கத்தினையுடைய, வார்த்தையால் கூட பாவம் செய்யாத தலைமைத்துவம்.**

தலைமைத்துவத்தை பாரபட்சமின்றி அறிவால்

ஆராய்ந்து தெரிவு செய்கையில் புலப்படுவதானது,

நாற்பத்தைந்து வருடங்களுல் பிரம்மச்சரிய விரதத்தில் எவ்வித கலங்கமும் அற்ற தூய்மையான ஒழுக்கத்தை கொண்டவர்.

நாற்பத்தைந்து வருடங்களுல் எவ்விதமான சந்தர்பத்திலும் ஏனையோரின் மனத்தை வேதனையடைச்செய்யும் ஒரு வார்த்தையையேனும் கூறாதவர்.

## வாய்மையே உருவாகியவர்

அர்த்தமற்ற பேச்சுக்கள், புறங்கூறல் என்பனவற்றிலிருந்து முழுமையாக விடுபட்டவர்.

## எமக்கு சொல் தவறலாம் ஆனால் தலைமைத்துவம்?

எமக்கென்றால் சொற்கள் பிழைக்கும். அவ்வாறு தவறி விட்டால் “ஐய்யோ! நான் சொல்ல நினைத்து இதுவல்ல. அதற்கு பதிலாக இதனை வேறுமுறையில் சொல்லியிருந்தால் நன்றாக இருந்திருக்குமே” இப்படியாக நினைவு கூறும் சந்தர்பங்கள் நிறையவே உள்ளன. பாருங்கள், மிகச்சரியான தலைமைத்துவத்தை. புத்த பகவானின் வாழ்வில் இவ்வாறான ஒரு சம்பவம் கூட இல்லை. புத்த பகவானுக்கு ஒரு சொல் கூட பிழைக்கவில்லை. எவ்விதமான பிழைகளுமற்ற சொற்களையே புத்த பகவான் உபயோகித்தார். இது புத்த பகவானின் ‘விஜ்ஜாசரண’ குணத்தின் ஒன்றாகும். ‘விஜ்ஜா’ என்பது உய்த்தறியப்பட்ட ஞானமாகும் ‘ சரணய’ என்பது நடத்தையாகும் அதாவது தன்னால் உய்த்தறியப்பட்ட ஞானத்திற்கேற்ப தூய்மையான

நடத்தை கொண்டவராக தன் வாழ்வினை நடத்தியவரே புத்த பகவான் என்பதே இதன் பொருளாகும். ஞானத்தின்படி தன் வாழ்வை நடத்தும் ஒரு ஞானியையே சரணடைய வேண்டும். அவ்வாறில்லாது மூடத்தனமானவர்களை சரணடைந்தால் நாமும் அழிந்து போக வேண்டிவரும்.

## எம் வாழ்க்கை முறை

எம் வாழ்க்கை செயற்படும் முறை ஒன்று உள்ளதல்லவா? அதிகாலை எழும்புகிறோம். தேநீர் அருந்துகிறோம், சமைக்கின்றோம், உணவு உண்கிறோம். வேலைத்தளத்திற்கு புறப்படுகிறோம். நண்பர்களை சந்தித்தால் ஏனையோரின் குறைகளை கதைக்கின்றோம். அலுவல் வேலைகளை செய்கிறோம். நேரத்தை பார்க்கிறோம், பஸ்ஸில் ஏறுகிறோம். கடையில் தேவையான பொருட்களை வாங்குகிறோம். வீட்டினை அடைகிறோம். சமைத்து சாப்பிடுகிறோம். பின் தொலைக்காட்சியை பார்த்து உறங்கிவிடுவோம். எம் வாழ்கை வட்டம் இதுவே. அடுத்த நாளும், இது போல தினந்தோறும் இதனையே செய்கின்றோம். நாம் தலைவராக தெரிவு செய்பவரும் இவ்வாறான இல்லற வாழ்வை நடத்தியவரையா தேர்ந்தெடுக்க வேண்டும்?

## புத்த பகவானின் வாழ்க்கை முறை

புத்த பகவானின் வாழ்க்கை முறை மிகவும் சுந்தரமானது. அன்னார் அதிகாலை இரண்டு மணிக்கு துயிலெழுவார். காலை கடன்களை முடிப்பார். சில சமயங்களில் நீர் அருந்துவார். அடுத்தாக அனைத்து உலகங்களுக்கும் கருணையை பரப்புவார். அது ”*மஹா*

*கருணை சமாபத்தி”* என்று கூறப்படும். அதன் பின்னர் தியான நிலையை அடைவார். தியானத்திலிருந்து எழுவதற்கு முன் அன்றைய தினத்தில், ‘யாருக்கு உதவ வேண்டும்’ என தீர்மானிப்பார். அடுத்து அவரின் உணவு பாத்திரத்தை கைலேந்தி, வீடு வீடாக செல்வார்.

புத்த பகவானை போன்ற உத்தமருக்கு வழங்கும் தானத்தினால் மஹா புண்ணியம் கிட்டும். ஒரு வீட்டில் அவர் பெறுவது ஒரு பிடி சோறுதான். இவ்வாறு தமக்கு போதியளவு உணவு கிடைத்ததும் எங்காவது ஒரு மரத்தின் கீழ் அல்லது ஓய்வான இடத்தில் அமர்ந்து அந்த உணவை சாப்பிடுவார். அப்போது யாராவது புத்த பகவானை காண வந்தால் அவருக்கும் தர்மபோதனைகளை நிகழ்த்துவார். அடுத்ததாக அடிகளார் காலையில் உதவி செய்ய நினைத்த மக்களை தேடிச்சென்று அவர்களுக்கு தர்மத்தை போதிப்பார். அவர்களை துயரத்திலிருந்து மீட்பார். பரம சுந்தரமான மோட்சத்திற்கான வழியை காட்டுவார். புத்த பகவான் ஒரு நாளைக்கு ஒரு வேளை மாத்திரம் தான் உணவு உட்கொள்வார். பகல் வேளைகளில் கொஞ்சம் ஓய்வெடுத்து மீண்டும் தியானத்தில் அமர்வார். அடிகளார் மாலை நேரத்தில் நீராடுவார். அதன்பின் தர்ம சபையில் எழுந்தருளி பிக்குமார்களுக்கு தர்மத்தை போதிப்பார். அதன்பின் இரவு வேளைகளில் அதாவது பத்து மணியிலிருந்து பன்னிரெண்டு மணிவரையிலான காலத்தில் புத்த பகவானை காண பிரம்மாக்களும் தேவர்களும் கூட்டமாக வருவார்கள். புத்த பகவான் அவர்களுக்கும்

தர்மத்தை போதிப்பார். (புத்த பகவான் குருவாக இருப்பது மனிதர்ளுக்கு மட்டுமல்ல தேவர்களுக்கும் தான்) அதன்பின் பன்னிரெண்டு மணியிலிருந்து இரண்டு மணிவரையிலும் துயில் கொள்வார். அடிகளார்க்கு தலையணை இருக்கவில்லை. வலது புறமாக சரிந்து தன் கையையே தலையணையாக கொண்டு இரு மணித்தியாலங்கள் மாத்திரம் நித்திரை கொள்வார். அவர் சம்புத்த நிலையை அடைந்து உன்னத பரிணிர்வானத்தை அடையும் வரையிலான இடைப்பட்ட காலம் அதாவது நாற்பத்தைந்து வருட காலங்கள் எவ்வளவு தூய்மையானது, என்பது புலப்படுகின்றதா? புத்த பகவானிடம் சுந்தரமான செயல்பாடுகளே இருந்தன. அவரின் வாழ்க்கையானது மிகவும் சுந்தரமானதாகும். அது புத்த பகவானின் ஒரு குணமான சுகத்த எனும் குணத்தின் வெளிப்பாடாகும். இவ்வாறான தூய்மையான நடத்தைகளை கொண்ட ஒருவரையே எமது ஆன்மீக தலைவராக தெரிவு செய்ய வேண்டும். ஏனையோரின் பேச்சுக்களுக்கு அடிமையாகாமல் சுயாதீனமாக தெரிவு செய்ய வேண்டும்.

**அனைத்து உலகங்கள் தொடர்பான அறிவு தெட்டத்தெளிவாது ஆகும்.**

ஒவ்வொரு உயிரினதும் இந்த பிறவிபெருங்கடலில் தன் கர்ம வினைக்கேற்ப கிடைக்கும் கதா பாத்திரங்கள் வேறுபட்டவை. ஆதி எதுவென்று புலப்படாத இவ்சுழற்சியில் திணரும் அவ்வுயிர்களுக்கே தெரியாத தத்தமது முற்பிறப்புக்ளை புத்த பகவானால் மிகத்துள்ளியமாக கூறமுடியும்.

## ஒரு மீனின் உலகம்

சாவத்திய நகரத்திலுள்ள ஒரு கங்கையில் மீன் பிடித்து கொண்டிருந்த மீனவர்களின் வலையில் பொன்னிறமான மீன் ஒன்று சிக்கியது. அந்த மீன் விசேடமான மீனாக இருந்ததால் அதனை ஒரு பாத்திரத்தில் இட்டு அரசனிடம் கையளித்தார்கள். அரசனும் அந்த மீனைக்கண்டு புதுமையடைந்து அதனை புத்த பகவானுக்கு காட்ட வேண்டும் என்று கூட்டத்தோடு ஜேத்தவன ஆச்சிரமத்திற்கு சென்றார். செல்லும் வழியில் மீன் வாயை திறந்து பெரிய கொட்டாவி ஒன்று விட்டது. அந்த கொட்டாவியினால் அந்த முழு பிரதேசமும் துர்நாற்றமொன்று வீசியது. அரசன் உட்பட அனைத்து மக்களுக்கும் இது ஆச்சரியமானதாக இருந்தது. அதுதான் இம்மீனின் உடம்பு பொன்னிறமானது, ஆனால் வாய் மிக மிக துர்நாற்றமானது. இந்த மீனைப்பற்றி தெரிந்து கொள்ள அனைவருக்கும் மிகுந்த ஆவலாக இருந்தது. மீனை புத்த பகவானிடம் கொண்டு சென்றார்கள். புத்த பகவான் மீனை பார்த்து இதனுடைய இறந்த காலத்தை பற்றி தெரிந்து கொள்ள விரும்புகிறீர்களா? என அரசனிடம் வினவினார். அரசன் தன் விருப்பத்தை தெரிவித்ததும் புத்த பகவான் தன் சித்தாற்றல் மூலமாக மீனுக்கு பேசும் திறமையை ஏற்படுத்திகொடுக்கிறார்.

புத்த பகவான் இப்போது அந்த மீனுடன் உரையாடுகிறார்.

*“மீனே நீ முன்பு எங்கு வாழ்ந்திருந்தாய்?”*

“மனித உலகில் பிக்குவாக இருந்தேன்”

*“அப்போதைய பெயர் என்ன?”*

“கபில”

*“குடும்பத்தில் வேறு யார் இருந்தனர்?”*

“அம்மா இருந்தார் அவருடைய பெயர் சாதனா, தாப்பனா என ஒரு தங்கை இருந்தாள். சோதன என்று ஒரு அண்ணா இருந்தார். நாம் அனைவரும் பிக்குக்களாக துறவு பூண்டிருந்தோம்.”

*“அவர்கள் இப்பொழுது எங்கே?”*

“அம்மாவும் தங்கையும் நரகலோகத்தில் பிறந்துள்ளனர்”

*“ஏன் அவ்வாறு நிகழ்ந்தது?”*

“ஐய்யோ! சுவாமி நாம் பாவங்களையே செய்தோம். அந்த காலத்தில் வாழ்ந்திருந்த ஒழுக்கமான சீலமுள்ள ஏனைய பிக்குமாரின் மீது மிகவும் பொறாமை கொண்டு அவர்களை தூற்றினோம். நாம் மூவரும் சேர்ந்து அவர்களுக்கு நிறைய தொந்தரவுகள் செய்தோம்.நாம் உடம்பால் மட்டுமே பிக்குக்களாக இருந்தோம். மனத்தால் பிக்குக்களாக இருக்கவில்லை. அதனால் தான் இந்த துரப்பாக்கியம் ஏற்பட்டது.”

**அப்படியாயின் அண்ணாவிற்கு என்ன நடந்தது?**

“அண்ணா உடம்பினால் மட்டுமல்ல. மனதாலும் பிக்குவாக இருந்தார். அவர் உன்னதமான பரிணிர்வானத்தை அடைந்தார்”

*“இதன் பின் உனக்கு என்ன நடக்கும்?”*

"நான் இந்த மிருகலோகத்தின் பிறவிக்கு பின் நேரடியாக நரகத்திலே பிறப்பேன்"

இப்படியாக கூறிய மீன், மனப்பலத்துடன் மேலே பாய்ந்து அந்த பாத்திரத்தில் தலையை மோதி மரணமடைந்து மருகணமே துயரம் மிகுந்த நரகத்தில் பிறந்தது.

## அறிவியலினூடாக பார்க்கும் உலகமா இது?

பாருங்கள், உலகங்களை பற்றி உய்த்துணராத ஒருவருக்கு இந்த மீனுடைய முழுக்கதையும் சொல்ல முடியுமா? எங்களால் செய்ய கூடியது, தாங்கி ஒன்றை செய்து மீனை அதிலேவிட்டு அதற்கு உணவு கொடுத்து அதன் உடம்பில் ஏற்படும் நிறமாற்றத்தை மற்றும் அதன் வளர்ச்சியை பார்க்க மாத்திரமே.

'லோகவிது' என்பது எல்லா உலகங்களையும் உய்த்தறிந்தவர். என பொருள்படும் மனித உலகம். பிரேத உலகம், நரக உலகம், அசுர உலகம், மிருக உலகம், தேவ உலகம், நாக உலகம், பிரம்ம உலகம் என்ற அனைத்து உலகங்கள் தொடர்பான மிக மிக தெளிவான அறிவிருந்தது.

தன்னை பௌத்தர்கள் என கூறிக்கொள்ளும் சிலர் இந்த நரகலோகம், சுவர்க்லோகம் எனும் எல்லாமே இருப்பது இந்த பூமியில் தான் என சொல்கிறார்கள். அவர்கள் அனைத்து உலகங்களையும் உய்த்தறிந்த லோகவிதூ குணம் படைத்த தன் மோட்ச வழிகாட்டியை நம்பவில்லை. வறையறுக்கப்பட்ட குறுகிய சிந்தனைகளை கொண்ட தன் அறிவை

சரணடைந்துள்ள இவர்களால் ஒரு சிறப்பான மிகச்சரியான ஆன்மீக தலைமைத்துவத்தை தெரிவு செய்ய முடியாது.

## எவ்வித ஆயுதமுமின்றி ஏனையோரை கட்டுப்படுத்திய தலைமைத்துவம்.

புத்த பகவானுக்குரிய இன்னுமொரு குணம் தான் 'அனுத்தரோபுரிச தம்மசாரதீ.' இந்த குணத்திலிருந்து வெளிப்படுத்துவது யாதெனில் புத்த பகவான் இவ்வுலகத்தோரை கட்டுப்படுத்த வல்லவர் என்பதாகும். ஒருவரை கட்டுப்படுத்த சிலர் ஆயுதங்களை உபயோகிப்பார்கள். சிலர் வஞ்சனை நிறைந்த தந்திரமான புத்தியை உபயோகிப்பார்கள். சிலர் பணத்தை உபயோகிப்பார்கள். ஆனால் புத்த பகவான் இவ்வுலகத்தோரை கட்டுப்படுத்தியது வஞ்சனை நிறைந்த தந்திரத்துடன் அல்ல, பணத்தினால் அல்ல, ஆயுதங்களை பயன்படுத்தி அல்ல, படைகளை பயன் படுத்தி அல்ல, அவர் இவ்வுலகத்தோரை கட்டுப்படுத்தியது தன் விருத்தியடைந்த உள்ளத்தினாலயே! அதாவது வலிமை மிக்க தன் மனோபலத்தினாலயே! அவர் அதற்காக மூன்று முறைகளை கையாண்டார்.

## இர்தி பிரார்திஹார்யம்

புத்த பகவானுக்கு அளவிட முடியாத சித்தாற்றல்கள் இருந்தன. ஆகாயத்தில் நடப்பது. நீரில் நடந்து செல்வது. நிலத்தில் ஓரிடத்தில் மூழ்கி இன்னுமொரு இடத்தில் தோன்றுதல். மலைகள், குன்றுகள், சுவர்கள் என்பன ஊடுருவி செல்லுதல். எவ்வளவு சேய்மையான இடத்திற்கும்

ஒரு கணப்பொழுதில் செல்லுதல். சாதாரண காதுகளுக்கு விளங்காத ஒலியலைகளை கேட்டல். என எண்ணிலடங்காத இர்திக்களை உடையவராக புத்த பகவான் விளங்கினார். புத்த பகவான் இவ்வுலகத்தோரை கட்டுபடுத்த இம்முறையையும் பயன்படுத்தினார்.

## ஆதேசனா பிரார்திஹார்யம்

புத்த பகவானுக்கு இன்னுமொருவரின் மனத்தை அறியும் ஆற்றலிருந்தது. ஒருநாள் புத்த பகவான் ஒரு தவசியின் ஆச்சிரமத்திற்கு செல்லும் பொழுது அங்கிருந்த முனிவர் இவ்வாறு நினைத்தார். “நாளைய தினம் எனது பெருந்தொகையான மக்கள் எனக்கு தானம் கொண்டு வருவார்கள். அவ்வேளை புத்த பகவான் இருந்தாரெனில், வரும் என் மக்கள் புத்த பகவான் மீது பக்தி கொண்டுவிட்டால் என்ன செய்வது?” என்று. புத்த பகவான் அவரின் இவ்வெண்ணத்தை அறிந்து மறுநாள் அதிகாலையிலே ஆச்சிரமத்தை விட்டு வெளியேறி பிண்டபாதம் செய்து விட்டு மாலை நேரத்தில் மீண்டும் ஆச்சிரமத்திற்கு வருகை தந்தார். புத்த பகவானை கண்டதும் அந்த முனிவர் இவ்வாறு கூறலானார்.

“நான், தாம் வரும் வரைதான் பார்த்து கொண்டிருந்தேன். எனது பக்தர் கூட்டத்திற்கும் தங்களின் மகத்துவத்தை பற்றி கூறினேன். தாங்கள் ஏன் தானத்திற்கு வரவில்லை...?” என்று, அதற்கு புத்த பகவான், “நான் எப்படி வர முடியும்? நீங்கள் நினைத்தது அவ்வாறில்லையே” என்று பதிலளித்தார்.

இப்படியாக, புத்த பகவானுக்கு ஒரு புத்தகத்தை வாசிப்பது போன்று ஏனையோரின் உள்ளங்களை வாசிக்க முடியும். இதுவே 'ஆதேசனா பிரார்திஹார்யம' எனக்கூறுவது.

## அனுசாசனா பிரார்திஹார்யம்

செவிமடுப்போருக்கு தர்மத்தை உய்த்துணரும் படியாக போதிப்பதற்கு புத்த பகவானால் முடியும். இதுவே 'அனுசாசனா பிரார்திஹார்யமாகும்'. உலகத்தினோரை துன்பத்திலிருந்து மீட்க புத்தபகவான் அநேகமாக இம்முறையையே பயன்படுத்தினார். இந்த முறைகளினூடாகத்தான் புத்தபகவான் துஸ்சீலர்களை சீலமுள்ளவர்களாக்கினார். மனம் ஒன்றிக்காதவர்களை சமாதியை உருவாக்க செய்தார். உலோபிகளை கொடையாளிகளாக்கினார். மூடர்களை ஞானிகளாக்கினார். கொடூரமான உள்ளங்களை கொண்டோரை மென்மையான குணம் படைத்தோராக்கினார். இவ்வாறு புத்த பகவான் உயிர்களை கட்டுப்படுத்தி, கம்பீரமான தர்மத்தை போதித்து நிரந்தரமாகவே துயரப்பெருங்கடலில் இருந்து மீட்டெடுத்தார். இவ்வாறான ஒப்பற்ற ஆற்றல் படைத்த புத்த பகவானை எமது ஆன்மீக தலைவராக தெரிவு செய்வோமேயானால் அது எமது பெரும்பாக்கியமே.

## தேவர்களினதும் மனிதர்களினதும் உன்னதமான குரு

புத்த பகவானின் இன்னுமொரு குணம்தான் ' சத்தாதேவ மனுஸ்ஸானங்' அதிலிருந்து கூறப்படுவது என்னவென்றால் புத்த பகவான் தேவர்களுக்கும்

மனிதர்களுக்கும் குருவானவர் என்பதேயாகும். தர்மபோதனைகளை வாசிக்கும் போது எமக்கு புலனாகும் ஒரு விடயம் தான் புத்த பகவான் அநேகமான போதனைகளை தேவர்களுக்கும் பிரம்மாக்களுக்கும் போதித்துள்ளார் என்பதாகும்.

## எவ்விதமான பிழைகளுமில்லாமல், ஓடி ஒளியாமல் தர்மத்தை போதித்தார்.

புத்த பகவானின் எட்டாவது குணம் தான் 'புத்த' என்பதாகும். தன்னால் அறும்பாடுபட்டு சுயஞானத்தால் உய்த்தறியப்பட்ட, பரம கம்பீரமான, ஒப்பற்ற, மாற்றங்களுக்குட்படாத அந்த தர்மத்தை உலகத்தோருக்கு மகா கருணையோடு மொழிந்தருளினார். தெளிவான சொற்பிரயோகங்கள், உவமைகள் என்பன பயன்படுத்தி, பண்டிதன் முதற்கொண்டு பாமரன் வரையிலும் தர்மத்தை தன் வாழ்வில் உய்த்துணரக்கூடிய வகையில், பிறவிபெருங்கடலில் இருந்து விடுபடும் ஔடதமாக விளங்கும் அந்த தர்மத்தை போதித்தார்.

## இவ்வனைத்து குணங்களும் தன்னுள் கொண்ட மேன்மை படைத்தவர்

இதன்படி மேற்கூறப்பட்ட அனைத்து குணங்களும் ஒரு மனிதருள் இருப்பதாயின் அவர் உண்மையிலையே பாக்கியமுள்ளவர்தான். ஆம் இவ்வனைத்து குணங்களும் தன்னுள் தாங்கிக்கொண்டிருந்த அந்த சம்மா சம்புத்த பகவான், பகவா எனும் குணம் படைத்தவர். அதாவது பாக்கியமுள்ளவராவார்.

## தவறானதை கைவிடுவோம்

தவறானதை கைவிட்டு சரியான வழியை தெரிவு செய்வதற்கு மனதில் உறுதி வேண்டும், தைரியம் வேண்டும்.

நாம் குறிப்பட்டதொரு சமயத்தை பின்பற்றும் ஒரு குடும்பத்தில் பிறந்தோம், என்பதற்காகவே அந்த சமயத்தை பின்பற்றினோமேயானால் அதில் எவ்வித பிரயோசனமும் இல்லை. எமக்கு பிரயோசனத்தை தரும் ஒரு சமயத்தையே பின்பற்ற வேண்டும்.

நாம் இவ்வாறு நினைப்போம் ஒரு குடும்பம் உள்ளது அந்த குடும்பத்தில் கால்கள் இருந்தாலும் ஊன்றுகோலை பயன்படுத்தி தான் நடக்கிறார்கள் என்று வைத்துக்கொள்வோம். அம்மாதிரியான குடும்பமொன்றில் ஒருவர் பிறக்கிறார். பிறந்து சில வருடங்களுக்கு பின் அவர் நடந்து செல்லும் வயது வந்ததும் அவரது பெற்றோர் அவருக்கு ஊன்றுகோலை கொடுத்து "எம் அனைத்து பரம்பரையினரும் ஊன்றுகோலை பயன்படுத்தித்தான் நடந்தார்கள் நீயும் அவ்வாறு செய்" எனக்கூறுகிறார்கள். அறிவுள்ள ஒருவரானால் அவர் அதனை ஏற்காது தனியாக நடக்க முயற்சிக்க வேண்டும். அவ்வாறு முயற்ச்சி செய்து நடந்த பின் அவர் ஏனையோருக்கும் அதனை கூறுகிறார். "நீங்கள் தவறானதை செய்கிறீர்கள், நீங்கள் பரம்பரை பரம்பரையாக கால்களால் நடக்க முடிந்தும் அதனை செய்யவில்லை. பாருங்கள், ஊன்றுகோலின்றி நடக்கக்கூடியதாக உள்ளது" என்று. அப்போது அதனை செவிமடுக்கும் அறிவுள்ள ஒருவர் "உண்மைதான்" என

ஊன்றுகோலை விடுத்து நடக்கிறார்.

இவ்வாறான முறையில் தான் சமயத்தை தெரிவு செய்ய வேண்டும். அதாவது ஒருவர் பிறந்தது குறிப்பிட்டதொரு சமயத்தை பின்பற்றும் ஒரு குடும்பத்தில் என்றால் அந்த ஒரே காரணத்தை இட்டு அவர் அந்த சமயத்தை பின்பற்ற கூடாது. அக்குடும்பம் பௌத்தமானாலும் சரியே. தற்காலத்தில் பௌத்தமும் ஒரு ஊன்றுகோல் போன்ற சமயமாகிவிட்டது. உண்மையிலையே புத்த சமயமானது எவ்வித குறையுமற்ற சுயாதீனமான சமயமாகும். ஒரு மனிதன் ஒரு இந்துவாகவோ, கிறிஸ்துவனாகவோ, இஸ்லாமியனாகவோ ஏன்? பௌத்தனாகவோ இருக்கலாம். ஆனால் அவர்களுக்கு சரியான அல்லது தான் விரும்பிய மதத்தை பின்பற்றுவதற்கு தெளிவான அறிவும் சுயாதீனமும் தேவை.

ஆன்மீக தலைமைத்துவத்தை தெரிவு செய்வதாயின் தன் அறிவை உபயோகித்து ஆராய வேண்டும். புத்த பகவானின் 18000 போதனைகளினூடாக புத்தபகவானின் ஒப்பற்ற எண்ணவலைகளை நாம் உணரலாம். தன்னை பௌத்தர்கள் என வெளியுலகிற்கு காட்டிக்கொள்ளும் எத்தனை பேர் இவற்றை அறிந்திருப்பார்கள்? ஒருவர் வெறும் கண்மூடித்தனமான பக்தியோ அல்லது நம்பிக்கையையோ அடிப்படையாக கொண்டு பௌத்தத்தை கடைபிடிக்க முயன்றால் அது பிரயோசனமற்றது. ஏனெனில் பௌத்த சமயம் முழுக்க முழுக்க அறிவால் ஆராய வேண்டியதொன்றாகும். இவ்வாறு அறிவால் ஆராய்ந்து பார்த்துத்தான் தன் ஆன்மீக தலைமைத்துவத்தையும் தெரிவு

செய்ய வேண்டும். அவ்வாறு தெரிவு செய்யப்படும் தலைமைத்துவத்திற்கு தான் எம்மை முன்னேற்ற பாதையில் இட்டுச்செல்ல முடியும்.

## சிவப்பு நீல பச்சை நிறங்கொண்ட தலைவர்கள்?

ஒரு சாதாரண மனிதரிடம் அவரின் தலைவரை பற்றி வினவினால் அவரவர் அரசியற்கட்சிகளை பிரநிதித்துவப்படுத்தும் தலைவர்களையே கூறுவர். அதாவது "என்னை வெட்டினாலும் என் இரத்தம் கூட பச்சை நிறமாகவிருக்கும்" என்று சிலர், இன்னும் சிலர் "நீல நிறமானது என் இரத்தம்" எனவும் கூறிக்கொள்வதை நாம் பார்த்துள்ளோம். இவ்வாறு அவர்கள் சரணடைந்தது அரசியற்கட்சிகளையே! இங்கு கூறப்படும் இந்த தலைவர்கள் மனமாசுகளற்றவர்களா?

## இரத்தத்தை சுத்திகரிப்போம்

இன்றைய இலங்கையில் அநியாயங்கள் ,கொலைகள், மற்றும் சமூக விரோத செயல்கள் அதிகரிக்க காரணம் பௌத்த சமயத்தின் பிழையினால் அல்ல. பௌத்த சமயத்தினை பின்பற்றாமையே அதற்கு காரணம். மனிதர்களின் இரத்தத்தில் உறைந்துள்ள பலவீனங்களை போக்கும், குறைபாடுகளை நிவர்த்தி செய்யும் இந்த தர்மத்தை அவர்கள் பின்பற்றாமையே அதற்கு காரணமாகும். இரத்தத்தை சுத்திகரிக்கும் இந்த தர்மத்தினை அறியாமையே இவ்வனைத்து சமூகச்சீர்கேடுகளுக்கும் காரணமாக இருக்கிறது. இலங்கை மக்களுக்கு தவறிய இடம் இதுதான். தன் இரத்தத்தை சுத்திகரிப்பதற்கு தூய்மையான இரத்தத்தை கொண்ட தலைவரையே பின்பற்ற

வேண்டும்.

**தன்னுடைய ஆன்மீக தலைமைத்துவத்தை மிகச்சரியாக தெரிவு செய்தவர் முன்னேற்றமடைவார்.**

புத்த பகவான் அல்லது எம் ஆன்மீக தலைமைத்துவத்தை நினைக்கும் போது எமக்கு நினைவுக்கு வருவது மனமாசுகளற்ற ஒரு உத்தமர். அவ்வாறல்லாது பல்வேறுபட்ட நம்பிக்கைகளையுடைய எமது இரத்தத்தை சூடாக்கும் ஒருவரையல்ல. பகவான், சுயமாக ஞானத்தை உய்த்தறிந்த ஒப்பற்ற ஞானியாவார். நாம் இவ்வாறு நினைவுகூறுவது மனம், வாக்கு, காயம் என்பவற்றை முழுமையாக தூய்மைபடுத்திய பரம சுந்தரமானவரையே. தான் சரணடைந்தவரை , இவ்வாறு நினைவு கூறும் ஒருவருக்குத்தான் அறிவை பயன்படுத்தி அவசியமானதை மாத்திரம் தெரிவு செய்ய முடியும்.

**தாம் பின்பற்றும் சமயத்தை தெரிவு செய்கையில் ஏமாறினால் அவ்வளவுதான்**

எம் வீடுகளுக்கு ஒரு சில வகையான பொருட்களை வாங்கிச்சென்றால் ஏச்சுக்கள் வாங்க நேரிடும். “ஏன் இதனை வாங்கினீர்கள்? நீங்கள் நன்றாக ஏமாற்றபட்டிருக்கிறீர்கள்” போன்ற சொற்களையும் கேட்கலாம். இவ்வாறு சரியான முறையில் தெரிவு செய்யாததால் நட்டமே ஏற்படுகிறது. எவ்வாறாயினும் உண்ணக்கூடிய அல்லது பாவனை செய்யக்கூடிய பொருளானால் மலிவானதாயினும் தரம் குறைந்ததாயினும், விலையுயர்ந்ததாயினும் சாப்பிட்டோம், குடித்தோம், பாவனை செய்தோம்,

என அதனை மறந்து விடலாம். அது அத்தோடு முடிந்துவிட்டது என விட்டுவிடலாம். ஆனால் தான் வாழ்நாள் இறுதிவரை பின்பற்ற போகும் சமயத்தை தெரிவு செய்கையில் தவறினால் அவ்வளவுதான். தரம் குறைந்த பொருளை விடுத்து உயர்ந்த பொருளை தெரிவு செய்ய அறிவை உபயோகிக்கும் போது, தான் பின்பற்றபோகும் சமயத்தை தெரிவு செய்வதற்கு எவ்வளவு அறிவு வேண்டும்?

## பௌத்தர்கள் என நடிப்பவர்கள்

தற்போதைய பௌத்தர்களின் வீடுகளில் மட்டுமல்லாது விஹாரைகளிலும் கூட சுப முகூர்த்தம் நாள், நட்சத்திரம் என்பன பாராமல், எதனையும் செய்ய மாட்டார்கள். இவ்வாறு இவர்கள் கடைபிடிப்பது அந்தணர்களுடைய கருத்துக்களே அன்றி புத்த பகவானுடைய போதனைகளை அல்ல. புத்தபகவான் தவிர்க்க கூறிய விடயங்களை முதன்மை படுத்தி செய்யும் அக்காரியம் மங்கலமாகாது. பௌத்தர்கள் என தன்னை அடையாளப்படுத்தும் அவர்களுக்கு அக்காரியம் வெற்றிபெறாது. புத்த பகவானை முழுமையான புரிந்துணர்வோடு சரணமடையும் ஒருவர் ஒருக்காளும் இந்த நாள், நட்சத்திரம், சுப முகூர்த்தம் என்பன ஏற்றுகொள்ள மாட்டார்.

## மிகச்சரியான ஆன்மீக தலைமைத்துவத்தை தெரிவு செய்ய அறிவிருக்க வேண்டும்

சரணடைவதாயின், சரணடைய வேண்டியது மேற்குறிப்பிட்ட நற்குணங்களை கொண்ட ஒருவரையே. நான் இவ்வாறு கூறுவது தன் பிறப்பு சான்றிதலால்

மாத்திரம் பௌத்தர்களானவர்களுக்கு மட்டுமல்ல பொதுவாக அனைத்து மனிதர்களுக்குமேயாகும். இவ்வாறு எடுத்து கூறிய விடயங்களை உடையவரே தலைமைத்துவத்திற்கு தகுதியானவராவார். அம்மாதிரியான தலைமைத்துவத்தை தெரிவு செய்வது அவரவரது சொந்த விடயமாகும். அதே போல் தலைமைத்துவத்தை தெரிவு செய்யும் போது உணர்ச்சிகளுக்கு அடிமையாகாது அறிவாலே ஆராய வேண்டும்.

## ஆன்மீக தலைவர்கள் சத்தியத்தையே பரப்ப வேண்டும்.

நாம் ஒருவரை பின்பற்றவோ அல்லது பக்தி கொள்வதோ அவருடைய நடை, உடை, பாவனை என்பவற்றினாலாக இருக்க கூடாது. அவர் கூறும் விடயத்தில் சத்தியம் உள்ளதா? என விமர்சித்து பார்க்க வேண்டும். உண்மையான ஒரு ஆன்மீக தலைவர் உலகிற்கு சத்தியத்தை எடுத்து கூறியே மனிதர்களிடையே பக்தியை உருவாக்க வேண்டும். அவர் கூறுவது 'பரம சத்தியம்' என விமர்சித்து அறிந்து கொள்ளும் மக்கள் அவரை நாடிச்செல்கின்றனர். அவ்வாறு செல்ல காரணம் அவர் சத்தியத்தை கூறுவதேயன்றி வேறொன்றுமில்லை.

## சத்தியத்தை இலக்காக கொண்ட தலைமைத்துவம்.

புத்த பகவானின் வாழ்க்கையை பாருங்கள் அந்த உத்தமர் காலணிகள் அணியவில்லை. சீவரத்தையே அணிந்தார். பாத்திரத்தை எடுத்து ஆகாரத்திற்காக வீடு வீடாக தனியே தான் சென்றார். சாதாரண மக்களோடு தான் வாழ்ந்தார். புத்த பகவான்

மக்களுக்கு ஒரு இலக்கு கொடுத்தார் அது தான் "அறிவை விஸ்தரிக்கும் சத்தியம்" எனும் இலக்கு. அதனால் புத்த பகவானை சரணடைந்த மக்களுக்கு தத்தம் வாழ்வில் வெற்றியடைய முடிந்தது.

### உள்ளமா? உடலா?

எம்மனைவருக்கும் உள்ளம், உடல் என இரண்டு உள்ளது. இவ்விரண்டில் முக்கியமானது உடலல்ல உள்ளமேயாகும். அப்படியான மனதை முதன்மைபடுத்தியே புத்த பகவான் தர்மத்தை போதித்தார்.

### உங்களுக்கும் பிழையற்றதொரு இலக்கு

இவ்வகையில் பரிசுத்தமான தலைவருக்குரிய இலட்சணங்கள் கூறக்காரணம்: பௌத்த சமயத்தை பற்றி தெரியாத மக்களுக்கும், பல்வேறுபட்ட சமயங்ளை ஒன்றாக கலந்து குழம்பி கொண்டிருக்கும் மக்களுக்கும், புதிதாக ஒரு சமயத்தை தெரிவு செய்ய விரும்பும் மக்களுக்கும், தன் ஆன்மீக தலைமைத்துவம் தொடர்பான சரியான புரிந்துணர்வில்லாமல், இலக்கொன்றில்லாமல் ஓடுகிறவன் பின்னால் ஓடும் பௌத்த மக்களையும் இலக்கு வைத்தேயாகும்.

### மிகச்சரியான ஆன்மீக தலைவரை தெரிவு செய்தேன்

புத்த பகவான் மிகவும் தூய்மையான உள்ளத்தை உடையவராக பரிசுத்தமான வாழ்வை மேற்கொண்டவர். (அரஹங்)

புத்தபகவான் எவ்வித குரு உபதேசங்களுமின்றி

உலகத்தின் மாற்றமுறாத பரம கம்பீரமான சத்தியத்தை தன்னுள்ளே உய்த்தறிந்தார். (சம்மாசம்புத்த)

பகவான் எண்ணிலடங்காத சீலத்தினையுடைவராக அசைக்கமுடியாத உளச்சமாதியுடைவராக ஒப்பற்ற ஞானத்தினை உடையவராக வாழ்ந்தார். (விஜ்ஜாசரண சம்பண்ன)

எமது புத்தபகவான் சுந்தரமான பாதையில் பயணித்து உன்னதமான மோட்சத்தினை அடைந்தார். (சுகத்த)

அனைத்து உலகங்களையும் முழுமையாக உய்த்தறிந்தார். (லோகவிதூ)

கட்டுப்படாத தேவர்களையும் மனிதர்களையும் கருணையினால் கட்டுப்படுத்தியவர். (அனுத்தரோ புரிச தம்ம சாரதீ)

புத்தபகவான் தேவர்களினதும் மனிதர்களினதும் மோட்சத்தின் வழிகாட்டியாவார். (ஸத்தா தேவ மனுஸ்ஸானங்)

எம் புத்தபகவான் சுயமாக உய்த்தறிந்த ஞானத்தை ஏனைய உயிர்கள் மீது மஹா கருணைகொண்டு போதித்தார். (புத்த)

இவ்வனைத்து உயரிய குணங்களையும் தன் ஒருவருள்ளே தாங்க வல்லவர் பரிபூரணமானவர். (பகவா)

நாம் சரணடைந்த எம் புத்தபகவான் இப்பேர்பட்ட முழுமையான குணங்களோடு நாற்பத்தைந்து வருட

காலமாக அனைத்து விதமான சவால்களுக்கும் சரியாக முகங்கொடுத்தார். அனைத்து அசத்தியங்களையும் தோற்கடித்து உலகின் அஞ்ஞானம் எனும் இருளை நீக்கி சத்தியம் எனும் ஒளியை பரப்பினார்.

பரிபூரணமான ஞானம் படைத்த மானுடர்களுல் முழுமை அடைந்திருந்த, உயர்ந்த குணங்களின் இருப்பிடமான, கருணைபெருங்கடலான அந்த பாக்கியமுள்ள சம்மா சம்புத்த பகவானை நான் இக்கணம் முதல் முழுமையான மனதுடன் சரணடைகிறேன்!

இரண்டாவது முறையாகவும் முழுமையான மனதுடன் சரணடைகிறேன்!!

மூன்றாவது முறையாகவும் முழுமையான மனதுடன் சரணடைகிறேன்!!!

என்னுடைய இந்த சரணமானது எந்தவொரு துறவியினாலோ, அந்தணராலோ, தேவனாலோ ,மாரனாலோ அசைக்க முடியாத வண்ணம் சரணடைகிறேன். இந்த சரணமே என் வாழ்வின் ஒளியாகும்.

**சாது! சாது!! சாது!!!**

*"நமோ தஸ்ஸ பகவதோ அரஹதோ சம்மாசம்புத்தஸ்ஸ"*
அந்த பாக்கியமுள்ள அரஹத் சம்மாசம்புத்த பகவானுக்கு எனது நமஸ்காரமாகட்டும்!

# 02.

# உன்னதமான தலைவரால் மொழியப்பட்ட ஒப்பற்ற செயற்பாடு

நிரந்தரமான நிம்மதியை கருதி நாம் எமது ஆன்மீக தலைவராக தெரிவு செய்த சம்மா சம்புத்த பகவானின் திருவாயால் மொழியப்பட்ட, உன்னதமான ஸ்ரீ சத்தர்மத்தை எல்லோரும் புரிந்துணரக்கூடிய வகையில் எளிமையான மொழி நடையுனூடாக கற்போம்.

### தர்மத்தை புரிந்துணர மிக முக்கியமானவை

### 1. சுத்தா(நுண்ணியமாக தர்மத்தை செவிமடுத்தல்)

தர்மத்தை நாம் செவிமடுக்க வேண்டும். அவ்வாறில்லாமல் எம்மால் சுயமாக உய்த்துணர முடியாது. அவ்வாறு சுயமாக உய்த்துணர்ந்தவர் ஒருவரே, அவர்தான் எமது குருவானவாவர். தர்மத்தை அறிந்து கொள்ள வேண்டின் முதலில் அந்த

ஸ்ரீ சத்தர்மத்தை கேட்க வேண்டும். அதாவது படிக்க வேண்டும். முழுக்கவனத்துடன் அந்த தர்மத்தை செவிமடுக்க வேண்டும். இதுவே முதலாவது விடயம்.

### 2. தத்தா(ஞாபகம் வைத்து கொள்ளல்)

இவ்வாறாக கேட்ட தர்மத்தினை நன்றாக ஞாபகம் வைத்துக்கொள்ளல் அவசியம்.

### 3. வச்சஸா பரிசிதா (வார்த்தையால் பயிற்ச்சி செய்தல்)

தான் செவிமடுத்த தர்மத்தை நன்றாக ஞாபகம் வைத்த பின் அதனை வார்த்தையால் பழக்கப்படுத்த வேண்டும்.

### 4. மனசானு பெக்கித்தா (பகுப்பாய்வு செய்தல்)

இவ்வாறு நன்கு செவிமடுத்த, ஞாபகம் வைத்திருந்த அதன்பின் வார்த்தையால் பழக்கப்படுத்திய அந்த தர்மத்தை தன் அறிவினால் பகுப்பாய்வு செய்ய வேண்டும். தர்மம் தொடர்பாக அறிவை பயன்படுத்தி சிந்திக்க வேண்டும். இதனை *"யோனிசோ மனசிகாரய"* என்றும் கூறுவதுண்டு.

### 5. திட்டியா சுப்படிவித்தா

இவ்வாறான முறையில் தர்மத்தை செவிமடுத்து, ஞாபகம் வைத்திருந்து, வார்த்தையால் பழக்கப்படுத்தி அறிவால் பகுப்பாய்வு செய்யும் போது கண்டிப்பாக இந்த தர்மத்தை எம் வாழ்வினுள் உய்த்தறியலாம்.

இம்மாதிரியான படிமுறைகளோடு நாம் இப்போது தர்மத்தை கற்போம்.

## மனது இருப்பது எங்கே?

மனது அல்லது உள்ளம் என்று சொல்லப்படும் ஒன்று எம்மிடம் இருப்பது எம் எல்லோருக்கும் தெரியும். இந்த மனது இருப்பது எங்கே? மனது இருப்பது நாம் நினைக்கும் இடத்திலேயே. நினைக்கும் இடம் தான் மனது. எங்களுக்கு எத்தனை நினைக்கும் இடங்கள் இருக்கின்றன? எம்முள்ளே நினைக்கும் இடங்கள் ஆறு உள்ளது. அவைதான்: கண், காது, நாசி, நாவு, உடம்பு, உள்ளம் எனும் ஆறு இடங்களுமாகும். இவ் ஆறு இடங்களிலும் மனது உருவாகிறது.

## மனதின் இயல்பானது தீயை போன்றது

அது அப்படியென்றால் மனதின் இயல்புகளும் ஆறு வகைப்படுமா? விடை, இல்லை என்பதாகும். மனதின் இயல்பு ஒன்றே. அதை தெளிவாக கூறின் மனதின் இயல்பானது தீயை போன்றதாகும். எதனை அடிப்படை காரணியாக கொண்டு தீ மூண்டாலும் தீயின் இயல்பு ஒன்றே. ஆனாலும் நாம் விறகினால் உண்டாகும் தீயை விறகுத்தீ என்கிறோம். சாணத்தினால் உண்டாகும் தீயை சாணத்தீ என்கிறோம். அதேபோல் காட்டினுள் உருவாகும் தீயை காட்டுத்தீ என்கிறோம். தீ உருவாக அடிப்படை காரணியாக இருந்த மூலப்பொருளை வைத்து அந்தந்த பெயரினால் அழைக்கிறோம். ஆனால் தீயின் இயல்பு ஒன்றே,

## மேற்கூறப்பட்ட விடயங்களை அடிப்படையாக கொண்டு பார்ப்போமேயானால்

மனது தோன்ற கண்கள் அடிப்படையாக

இருப்பின் அது கண்களுல் தோன்றிய மனது, அதாவது சக்கு விஞ்ஞானயம். மனது தோன்ற செவிகள் அடிப்படையாக இருப்பின் அது செவியினால் தோன்றிய மனது, அதாவது சோத்த விஞ்ஞானயம். மனது தோன்ற நாசி அடிப்படையாக இருப்பின் அது நாசியினால் தோன்றிய மனது, அதாவது காண விஞ்ஞானயம். மனது தோன்ற நாவு அடிப்படையாக இருப்பின் அது நாவினால் தோன்றிய மனது, அதாவது ஜிவ்ஹா விஞ்ஞானயம். மனது தோன்ற உடம்பு அடிப்படையாக இருப்பின் அது உடம்பினால் தோன்றிய மனது, அதாவது காய விஞ்ஞானயம். மனது தோன்ற மனம் அடிப்படையாக இருப்பின் அது மனதால் தோன்றிய மனது அதாவது மனோ விஞ்ஞானயம்.

### மனம் உருவாகுது எவ்வாறு?

கண்ணில் மனது தோன்றுவதற்கு அவசியமான காரணிகள் யாவை? புலப்படும் கண் மற்றும் உருவம் எனும் இரண்டும் இணையும் போது கண்ணில் மனம் அதவாது சக்கு விஞ்ஞானயம் தோன்றுகிறது. அதேபோல் காதும் சப்தமும் இணையும் போது சோத்த விஞ்ஞானயம் தோன்றுகிறது. நாசியும் மணமும் இணையும் போது காண விஞ்ஞானயம் தோன்றுகிறது. நாவும் சுவையும் இணையும் போது ஜிவ்ஹா விஞ்ஞானயம் தோன்றுகிறது. உடலும் உடலுணர்வுகளும் இணையும் போது காய விஞ்ஞானயம் தோன்றுகிறது. அதேபோல் மனமும் எண்ணப்பாடுகளும் இணையும் போது மனோ விஞ்ஞானயம் தோன்றுகிறது.

## மனது எவ்வாறு தோற்றம் பெறுகிறது?

கண்ணில் மனது தோன்றுவதற்கு அவசியமான காரணிகள் யாவை? கண்ணில் மனது தோன்ற இரு காரணிகள் அவசியமாகும். பார்வை உள்ள கண் தேவை. மற்றும் அந்த கண்களுக்கு முன்னால் ஒரு உருவம் தேவை. இந்த இரண்டும் சேரும் போது கண்ணில் மனது அதாவது சக்கு விஞ்ஞானயம் தோன்றுகிறது. அதே போல் காதும் சப்தமும் சேரும் போது சோத்த விஞ்ஞானயமும், நாசியும் மணமும் சேரும் போது காண விஞ்ஞானயமும், நாவும் சுவையும் சேரும் போது ஜிவ்ஹா விஞ்ஞானயமும், உடலும் உடலுணர்வுகளும் சேரும் போது காய விஞ்ஞானயமும், மனதும் சிந்தனைகளும் சேரும் போது மனோ விஞ்ஞானயமும் தோற்றம் பெறுகிறது.

கண், காது, நாசி, நாவு, உடல், மனம் எனும் ஆறு இடங்களில் மனம் அதாவது விஞ்ஞானயம் தோற்றம் பெறுவதற்கு: பார்வையுள்ள கண், கேட்கும் காதுகள் என இந்த ஆறு புலன்களும் நன்கு இயங்கும் இந்திரியங்களாக வேண்டும். அதேபோல் மனம் தோன்றுவதற்கான சுபாவம் ஆறு புலன்களுக்கு மட்டும் இருந்தால் போதாது. மனது உண்டாவதற்குரிய செயல்களும் நடக்க வேண்டும். இந்த செயல்பாடுகள் முறையாக இல்லாவிடில் மனது அந்த புலன்களிலே தோன்றாது. உதாரணமாக இவ்வாறு நினைப்போம் நாம் ஆழ்ந்த தூக்கத்தில் இருக்கும் போது யாரும் கதைத்தால் எமக்கு அது கேட்காது. இந்நேரங்களில் நன்றாக கேட்கும் காதுகள் எம்மிடமிருந்தன. சப்தமும் இருந்தது. என்றாலும் மனம் செயல்பாட்டில் இல்லாததால்

இந்த சப்தத்தை மனதால் தெரிந்து கொள்ளும் இயல்பு அங்கு தோன்றவில்லை. இதனை வேறொரு வழியில் கூறுவதாயின் சோத்த விஞ்ஞானயம் தோன்றவில்லை. இங்கு விஞ்ஞானயம் தோன்றுவதற்குரிய செயற்பாடுகள் சரியாக இடம்பெறாமையே இதற்கு காரணமாகும்.

நாம் ஆழ்ந்த யோசனையிலிருக்கும் போது எவராவது எம்முன் வந்து நின்றால் கூட அது எமக்கு தெரியாது. அவ்விடத்தில் பார்வையுள்ள கண்களும் உருவமும் இருந்து கூட கண்ணில் சக்கு விஞ்ஞானயம் தோன்றுவதற்குரிய வகையில் மனம் செயல்பாட்டில் இருக்கவில்லை. மனது தோன்றுவதற்குரிய ஆறு புலன்களில், மனது தோன்றுவதற்குரிய விடயங்கள் இயங்கும் தன்மையுடையதாக அதாவது செயற்பாடுடையதாக இருக்க வேண்டும். மனது தோன்றும் இச்செயற்பாட்டில்: கண் - உருவம், காது -சப்தம், நாசி - மணம், நாவு - சுவை, உடல் - உணர்வு, மனம் - சிந்தனை என்பன முறையாக இருக்கும் போது மனம் அல்லது விஞ்ஞானயம் அவ்வவ் புலன்களிலே தோன்றும்.

## மாற்றம் கொள்ளாத ஏதும் இங்கு உண்டோ?

கண் நிரந்தரமானதா நிரந்தரமற்றதா? கண்களை நிரந்தரமாக்கி கொண்டவர் யாரையேனும் நாம் பார்த்ததுண்டா? இல்லை. பிறந்த நாளிலிருந்து இன்று வரை எம் கண்கள் எவ்வளவு மாற்றங்களை கொண்டுள்ளது. எவ்வளவு பலவீனங்களை உடைமையாக்கி கொண்டுள்ளது? எம் கண்களும் என்றாவது ஒரு நாளில் முழுமையாக தெரியாமல்

கூட போகலாம். எம்மனைவரதும் கண்கள் நிரந்தரமானதில்லை. அதேபோல் எந்தவிதமான நித்தியமான பொருளையேனும் நாம் இதுவரை கண்டதில்லை. எம் கண்களுக்கு தெரியும் எல்லா உருவங்களுமே அநித்தியமானவையே, மாற்றங்களுக்குட்படுபவையே. உலகில் மாற்றத்தை காணாத நித்தியமான எந்தவொரு பொருளும் இல்லை. மாற்றங்களுக்கு உட்படுபவை எவ்வாறு நித்தியமாகும்? இவ்வாறாக அநித்தியமான கண்களும், அநித்தியமான உருவமும் சேர்வதால் உண்டாகும் கண்ணின் மனது, அதாவது சக்கு விஞ்ஞானயம் என்பது கண்டிப்பாக அநித்தியமானதாகவே இருக்க வேண்டும். இவ்வாறாக அநித்தியமான விடயங்களில் நிரந்தரமான ஒரு விடயத்தையேனும் தேட முடியாது, உருவாக்கவும் முடியாது.

காதுகளும் மாற்றத்திற்குட்படும் ஒன்றுதான். இந்த காதுகளும் ஒருநாள் நிரந்தரமாகவே கேட்காத நிலைக்கு சென்றுவிடும். இவ்வாறான அநித்தியமான காதுகளும் அநித்தியமான சப்தமும் ஒன்று சேர்வதால் ஏற்படும் காதின் மனது, அதாவது சோத விஞ்ஞானயம் என்பதும் அநித்தியமாகும். இவ்வாறாக அநித்தியமான நாசியும் அநித்தியமான மணமும் ஒன்று சேர்வதால் உண்டாகும் காண விஞ்ஞானயமும் அநித்தியமானது. அநித்தியமான நாவும் அநித்தியமான சுவையும் சேரும் போது உண்டாகும் ஜிவ்ஹா விஞ்ஞானயமும் அநித்தியமானது. அநித்தியமான உடலும் அநித்தியமான உடலுணர்வுகளும் சேரும் போது உண்டாகும் காய விஞ்ஞானயமும் அநித்தியமானது. அநித்தியமான

மனதும் அநித்தியமான சிந்தனைகளும் சேரும் போது உண்டாகும் மனோ விஞ்ஞானயமும் கண்டிப்பாக நிரந்தரமற்றவையே, நித்தியமற்றவையே ஆகும்.

எம் மனதும் நிரந்தரமற்றதே. எவ்வாறு அது எமக்கு தெரியும்? மனது ஒவ்வொரு நொடிகளிலும் மாற்றமடைகிறது. மனதில் தோன்றும் சிந்தனைகளும் அவ்வாறே. இதுவரை எம் மனதில் நிரந்தரமான மாற்றமடையாத எண்ணங்கள் தோன்றியுள்ளதா? இல்லை. அப்படியாயின் மனதும் மனதில் தோன்றும் சிந்தனைகளினாலும் தோன்றிய மனோ விஞ்ஞானயம் என்பது அநித்தியமானதே! "எம்முடலில் அல்லது மனதிலே ஊசிமுனை அளவேனும் நித்தியமானது என்று ஒன்றேனும் இருந்திருந்தால் விடுதலை என்பதை அடைய முடியாது" என புத்த பகவான் தனது போதனைகளிலே மொழிந்துள்ளார். நித்தியமானது ஏதேனும் இருப்பின் உள்ளமோ, உடலோ மரணிப்பதில்லை. அதேபோல் நிரந்தரமான ஒன்றிருப்பின் திடீர் மரணங்களும் ஏற்படாது. மீண்டும் பிறவியெடுக்கவும் முடியாது. இவ்விரண்டும் இருப்பது மாற்றம் என்று ஒன்றிருப்பதால்தான். இந்த மாற்றமடையும் இயல்பினை மிகச்சரியாக நாம் உய்த்தறியும் போது அவ்வனைத்திலிருந்தும் எம்மால் விடுதலையடைய முடியும்.

## விஞ்ஞானயம் (விசேடமாக அறிந்து கொள்ளல்) உண்டாவது

விஞ்ஞானயம் எனக்கூறப்படுவது ஏதேனும் ஒரு விடயத்தை விசேடமாக அறிந்து கொள்வதையே ஆகும். அதன் தொழிற்பாட்டிற்காக கண், காது, நாசி, நாவு, உடல், மனம் எனும் ஆறு புலன்களுக்கும்

வெளியுலகத்திலிருந்து சில இலக்குகள் கிடைக்க வேண்டும். அதாவது உருவத்தினாலோ சப்தத்தினாலோ, மணத்தினாலோ, சுவையினாலோ உடலுணர்வுகளினாலோ, சிந்தனைகளினாளோ அந்த இலக்குகள் கிடைக்கின்றன. இந்த இலக்குகளோடு கண், காது, நாசி, நாவு, உடல், மனம் சேரும் போது அதனை நாம் அறிந்து கொள்கிறோம். இதனையே விஞ்ஞானயம் என்கிறோம். மனது தோன்றாத சந்தரப்பங்களில் மனதின் செயற்பாடு இடம்பெறுவதில்லை. அம்மாதிரியான சந்தர்ப்பங்களில் கண்களுக்கு முன் ஒரு உருவம் இருந்தாலும் மனதினால் அதனை அறியும் மனசிகாரம் அங்கில்லாததால் விஞ்ஞானயம் தோன்றுவதில்லை. வெளியுலகத்திலிருந்து இருந்து கிடைக்கும் எவ்விதமான இலக்குகளையும் அறிந்து கொள்ள மனது இயங்குகின்ற தன்மையில், அதாவது செயற்படும் விதத்தில் இருக்க வேண்டும்.

1. கண்ணுக்கு தெரியும் உருவம் ஒன்றை மனம் விசேடமாக அறிந்து கொள்ளும் செயற்பாடுடைய இயல்பே சக்கு விஞ்ஞானயமாகும்.

2. காதிற்கு கேட்கப்படும் சப்தத்தினை மனதினால் விசேடமாக அறிந்து கொள்ளும் செயற்பாடுடைய இயல்பே சோத்த விஞ்ஞானயமாகும்.

3. நாசிக்கு கிடைத்த மணத்தை மனதினால் விசேடமாக அறிந்து கொள்ளும் செயற்பாடுடைய இயல்பே காண விஞ்ஞானயமாகும்.

4. நாவுக்கு கிடைத்த சுவையை பற்றி மனதினால் விசேடமாக அறிந்து கொள்ளும் செயற்பாடுடைய

இயல்பே ஜிவ்ஹா விஞ்ஞானயமாகும்.

5. உடலுக்கு கிடைக்கும் உடலுணர்வுகளை பற்றி மனதினால் விசேடமாக அறிந்து கொள்ளும் செயற்பாடுடைய இயல்பே காய விஞ்ஞானயமாகும்.

6. மனதில் எழும் சிந்தனைகளை பற்றி மனதினால் விசேடமாக அறிந்து கொள்ளும் செயற்பாடுடைய இயல்பே மனோ விஞ்ஞானயமாகும்.

எங்களுடைய மனது இருப்பது எங்கே என்று இப்போது விளங்குகிறதா? ஆறு புலன்களிலும் மனம் தோன்றுகிறது. ஆனால் மனதின் இயல்பு ஒன்றுதான்.

## மூன்று விடயங்களின் சேர்க்கை

இவ்வாறாக உருவாகிய விஞ்ஞானயமும் கண் காது, நாசி, நாவு, உடல், மனம் எனும் ஆறு புலன்களும் உருவம், சப்தம், மணம், சுவை, உடலுணர்வு, சிந்தனை எனும் வெளியுலக இலக்குகளும் ஒன்றாக சேருவது அல்லது இணைவது ‘ஸ்பரிசம்’ எனப்படும்.

1. கண்களும் உருவமும் சக்கு விஞ்ஞானயமும் சேரும் போது கண்ணின் ஸ்பரிசம் உண்டாகிறது.

2. காதுகளும் சப்தமும் சோத்த விஞ்ஞானயமும் சேரும் போது காதின் ஸ்பரிசம் உண்டாகிறது.

3. நாசியும் மணமும் காண விஞ்ஞானயமும் சேரும் போது நாசியின் ஸ்பரிசம் உண்டாகிறது.

4. நாவும் சுவையும் ஜிவ்ஹா விஞ்ஞானயமும் சேரும் போது நாவின் ஸ்பரிசம் உண்டாகிறது.

5. உடலும் உடலுணர்வுகளும் காய விஞ்ஞானயமும் சேரும் போது உடலின் ஸ்பரிசம் உண்டாகிறது.

6. மனமும் சிந்தனையும் மனோ விஞ்ஞானயமும் சேரும் போது மனதின் ஸ்பரிசம் உண்டாகிறது.

**ஸ்பரிசம் எமக்கு கொடுத்தது...!**

மேற்கூறபட்ட 'மூன்றின் சேர்க்கை' அல்லது ஸ்பரிசத்தினால் தான், காணும் உருவங்களை அனுபவிக்கிறோம். இணங்கண்டுகொள்கிறோம் அதனை பற்றி சிந்தனை செய்கிறோம். கேட்கும் சப்தங்களை அனுபவிக்கிறோம். இணங்கண்டுகொள்கிறோம் அதனை பற்றி சிந்தனை செய்கிறோம். முகரும் மணங்களை அனுபவிக்கிறோம். அது எவ்வகையான மணம் என இணங்கண்டுகொள்கிறோம் அதனை பற்றி சிந்தனை செய்கிறோம். சுவைக்கும் சுவையை அனுபவிக்கிறோம். எவ்வகையான சுவை என இணங்கண்டுகொள்கிறோம். அந்த சுவையை பற்றி சிந்தனை செய்கிறோம். உணரும் உடலுணர்வுகளை அனுபவிக்கிறோம். இணங்கண்டுகொள்கிறோம் அதனை பற்றி சிந்தனை செய்கிறோம். சிந்திக்கும் எண்ணங்களை அனுபவிக்கிறோம். இணங்கண்டுகொள்கிறோம் அதனை பற்றி சிந்தனை செய்ய முற்படுகிறோம். இவையெல்லாம் இடம்பெறுவது ஸ்பரிசத்தினாலயே ஆகும். இந்த ஸ்பரிசம் இல்லாவிடில் அதனை மீறி அனுபவிப்புகளோ, இணங்கண்டு கொள்ளுதலோ அவற்றை பற்றி சிந்தனை செய்வதோ நடைபெறாது. இது தொடர்பாக நாம் அறிந்திராவிடிலும் இந்த செயற்பாடானது இடைவிடாது எம்முள் நடந்து கொண்டிருக்கிறது. ஒருவரை பார்த்து

சிரிக்கும் போது அங்கு ஸ்பரிசம் தோன்றியுள்ளது. ஒரு பாடலை கேட்டு 'அது அழகானது' என்று நினைப்பது ஸ்பரிசத்தினாலயே. நறுமணம், துர்நாற்றம் என்பனவற்றை உணர்ந்து கொள்ளும் போதும் நாவில் சுவை ஏற்படும் போதும் தொடுகை, குளிர், உஷ்ணம் ஆகியவற்றை உணரும் போதும் ஏதாவது ஒன்றை நினைக்கும் போதும் அங்கு ஸ்பரிசம் தான் தோற்றம் பெறுகிறது. ஸ்பரிசம் இல்லையென்றால் இவை ஒன்றும் நிகழாது.

## தோலுரித்த எருதினை போன்றது ஸ்பரிசம்

ஸ்பரிசத்திலிருந்து விடுபட முடியாது. புத்த பகவான், இந்த ஸ்பரிசத்தை தோலுரித்த உயிருள்ள பசுவிற்கு உவமை படுத்தி கூறியுள்ளது இதனால் தான். நாம் இவ்வாறு நினைப்போம், ஒரு பசுவை உயிரோடு தோலுரித்து வெளியே விட்டு விட்டோம் என்று. அந்த பசு தரையில் இருந்தால் தரையிலுள்ள ஏனைய பிராணிகளிடமிருந்து தப்ப முடியாது. தொல்லை தாங்காது நீருக்குள் பாய்ந்தால் நீரிலுள்ள உயிரினங்களால் தப்ப முடியாது. அங்கிருந்தும் ஒருவாராக மரநிழலொன்றுக்கு சென்றால் மரத்திலுள்ள பூச்சிகளால் தப்ப முடியாது. எந்த வகையிலும் இந்த பசுவால் தப்ப முடியாது. அதே போல் தான் ஸ்பரிசமும். எதை பார்த்தாலும், எதை கேட்டாலும், எதனை முகர்ந்தாலும், எதை சுவைத்தாலும், எதனை உணர்ந்தாலும், எதை யோசித்தாலும் அவ்வனைத்தும் ஸ்பரிசத்தினால்தான். இவ் ஸ்பரிசத்திலிருந்து மீள முடியாது. அவ்வாறு மீள முடிவது இந்த செயற்பாட்டின் யதார்த்தத்தை தன்னுள் உய்த்துணரும் போது தான்.

## அநித்தியத்தை உய்த்துணருவோம்

இங்கு சேர்ந்த இந்த மூன்று விடயங்களும் நித்தியமானதா? இல்லை. நித்தியமானதென்று உருவம், சப்தம், மணம், சுவை, உடலுணர்வு, சிந்தனை எதுவுமே இல்லை. இவ்வனைத்தும் மாற்றத்திற்கு உள்ளாகுபவையே! மாற்றமடையாத கண் காது, நாசி, நாவு, உடல், மனம் என்பனவும் இல்லை. அநித்தியமான இவ்விரண்டினால் உண்டாகும் விஞ்ஞானயமும் அநித்தியமானதே! அவ்வாறாயின் இவ்வநித்தியமான மூன்றினது சேர்க்கை அதாவது ஸ்பரிசமும் அநித்தியமே. இவை அநித்தியத்தியமாக இருப்பதனால்தான் உய்த்துணர்வின் மூலம் இந்த ஸ்பரிசத்தை நீக்க கூடியதாக உள்ளது.

## அனுபவிக்கும் முறைகள் மூன்று

ஸ்பரிசம் ஏற்படும் போதே நாம் அனுபவிக்கிறோம். நாம் அனுபவிப்பது உருவங்களை, சப்தங்களை, மணங்களை, சுவைகளை, உடலுணர்வுகளை மற்றும் சிந்தனைகளையே. இவற்றை தவிர்ந்த வேறு எதையாவது நாம் அனுபவித்திருக்கிறோமா? இல்லை

நாம் இவ்வனைத்தையும் அனுபவிப்பது மூன்று முறைகளாலே. அதுதான் நாம் இவற்றை சில வேளைகளில் இன்பமாக அனுபவிக்கிறோம். துன்பமாக அனுபவிக்கிறோம். அவ்வாறில்லாவிடில் இன்பமோ துன்பமோ அற்ற நிலை அதாவது சமநோக்குடன் அனுபவிக்கிறோம். இந்த கண்களினால் எமக்கு இன்பமோ, துன்பமோ அல்லது சமநோக்குடைய அனுபவிப்புகள் ஏற்படுகின்றன. இந்த காதுகளினால்

எமக்கு இன்பமோ, துன்பமோ அல்லது சமநோக்குடைய அனுபவிப்புகள் ஏற்படுகின்றன. இந்த நாசியினால் எமக்கு இன்பமோ, துன்பமோ அல்லது சமநோக்குடைய அனுபவிப்புகள் ஏற்படுகின்றன. இந்த நாவினால் எமக்கு இன்பமோ, துன்பமோ அல்லது சமநோக்குடைய அனுபவிப்புகள் ஏற்படுகின்றன. இந்த உடம்பினால் எமக்கு இன்பமோ, துன்பமோ அல்லது சமநோக்குடைய அனுபவிப்புகள் ஏற்படுகின்றன. இந்த மனதினால் எமக்கு இன்பமோ, துன்பமோ அல்லது சமநோக்குடைய அனுபவிப்புகள் ஏற்படுகின்றன. இந்த மூன்று முறைகளை தவிர வேறெந்த வகையிலேயும் எமக்கு அனுபவிப்புகள் ஏற்படுவதில்லை அல்லவா?

## ஸ்பரிசத்தின் மாற்றத்தோடு அனுபவிப்புகளும் மாற்றமடைகிறது.

அனுபவிப்புகள் ஏற்படுவது ஸ்பரிசத்தினால் என்பது இப்போது எமக்கு தெளிவாகிறதல்லவா? அவ்வாறாயின் இன்பம், துன்பம், சமநோக்கு என அனுபவிப்புகள் எவ்வாறு வேறுபட்டது? அவ்வாறு வேறுபட காரணம் என்ன?

அனுபவிப்புகள் மாற்றமடைய காரணம் ஸ்பரிசத்தின் மாற்றமே ஆகும். மூன்று விடயங்களின் சேர்க்கையாக அனுபவிப்புகள் தோன்றுகின்றன. அவ்வாறு சேர்ந்தது துன்பத்தை உண்டாக்கும் வகையிலானது என்றால் அது துன்பத்தை தருகிறது. அவ்வாறு சேர்ந்தது இன்பத்தை உண்டாக்கும் வகையிலானது என்றால் அது இன்பத்தை தருகிறது. அவ்வாறு சேர்ந்தது சமநோக்கினை உண்டாக்கும் வகையிலானது என்றால் அது சமநோக்கினை தருகிறது. அவ்வாறாயின் ஸ்பரிசத்தினால் தான் அனுபவிப்புகள்

ஏற்படுகின்றன என்பது தெளிவாகிறதல்லவா?

### அனுபவிப்புக்களை இன்னும் விரிவாக பார்ப்போமேயானால்...

ஸ்பரிசத்தினால் அனுபவிப்புகள் ஏற்பட்டன. இந்த அனுபவிப்புகள் உடலுக்குரியதா? இல்லை மனதிற்குரியதா? அனுபவிப்புகள் முழுமையாகவே மானசீகத்தை மாத்திரம் சார்ந்ததா? பாருங்கள் எமது கண், காது, நாசி, நாவு, உடல், மனம் ஆகிய ஆறு புலன்களுமே நால்வகை மகா தாதுக்களின் சேர்கைையாகும் இந்த ஆறு புலன்களிலுமே நால்வகை தாதுக்களின் செயற்பாடு உள்ளடங்கியுள்ளது.

நால்வகை மகா தாதுக்கள் என அழைக்கப்படுவது

பட்டவி - மண்ணாகும் இயல்பினை உடையன

ஆபோ - கரைந்து நீரோடு சேரும் இயல்பினை உடையன.

தேஜோ - வெப்பமுடைய இயல்பு

வாயோ - காற்றோடு கலந்து விடும் இயல்பினை உடையன.

அனைத்து பௌதீக வஸ்துக்களும் இந்த நால்வகை தாதுக்களால் தான் உருவாக்கப்பட்டுள்ளன. எமது உடலும் இந்நால்வகை தாதுக்களால் தான் உருவாக்கப்பட்டுள்ளது. ஆனால் மனம் இவற்றினால் மாத்திரம் உருவாக்கப்படவில்லை.

### பௌதீக மற்றும் மானசீகத்தின் இணைப்பு

மனம் நால்வகை தாதுக்களால் மாத்திரம்

உருவாக்கப்படாவிடிலும் மனதில் நால்வகை தாதுக்களின் செயற்பாடுள்ளது. அந்த நால்வகை தாதுக்களின் செயற்பாட்டில்தான் அனுபவிப்பு உள்ளது. அதனால் அனுபவிப்பு என்பது மானசீக மற்றும் பௌதீக செயற்பாடுகளின் சேர்க்கையே என கூறலாம். இதனை தெளிவாக விளங்கிக் கொள்வதற்கு நாம் இவ்வாறு நினைப்போம்.

மனதில்தான் அனுபவிப்புகள் ஏற்படுகின்றன. மூவகையான அனுபவிப்புகளுமே மனதில்தான் தோன்றுகிறது. கண்களால், காதால், நாசியால், நாவால், உடம்பினால் ஏன் மனதினாலும் அனுபவிப்புகள் ஏற்படுகின்றன. இப்போது இதனை விளங்கிகொள்வதற்காக, ‘இவ்வனைத்து அனுபவிப்புகளும் மனதிலே தோன்றுகிறது’ என்று நினைத்து கொள்ளுங்கள்.

### சுக துக்கத்தை நிர்ணயிப்பது ஸ்பரிசம் தான்

மனதிற்கு கவலையாக இருக்கும் சந்தர்ப்பங்களில் மனதிற்கு சேர்ந்திருப்பவை என்ன? இங்கு கவலை என்பது துன்ப அனுபவிப்பிற்காகும். அனுபவிப்பு ஏற்படுவதற்கு ஸ்பரிசம் தான் ஏதுவான காரணியாக இருந்தது. அவ்வேளை இங்கு ஒன்று சேர்ந்தது. அதுதான் மனமும் சிந்தனையும் மனோ விஞ்ஞானயமும் (விசேடமாக அறிந்து கொள்ளல்) எனும் இம்மூன்றுமாகும். இவ்வாறு சேர்ந்த அந்த சிந்தனை துக்கத்தை ஏற்படுத்துவதாக இருப்பதால் அவ்வேளை அது கவலையை தந்தது. மனதிற்கு எவ்வாறு மகிழ்ச்சி கிடைக்கின்றது? மகிழ்ச்சி என்பது இன்ப அனுபவிப்பாகும். அனுபவிப்புக்கென்றால்

ஸ்பரிசம் அவசியமாகும். இங்கும் மனமும் சிந்தனையும் மனோ விஞ்ஞானயமும் சேர்ந்துள்ளது. ஆனால் இங்கு உள்ள சிந்தனையானது இன்பத்தை ஏற்படுத்தும் வகையிலானதால் இந்த ஸ்பரிசத்தினால் இன்ப அனுபவிப்பு ஏற்பட்டது. இன்பம், துன்பம் எனும் இந்த அனுபவிப்புகளின் வேறுபாடு ஏற்படுவதற்கு ஸ்பரிசத்தின் வேறுபாடுதான் காரணமாகியது. இப்போது ஸ்பரிசத்தின் வேறுபாடால் தான் அனுபவிப்புகள் வேறுபடுகின்றன என்பது தெளிவானதாகும்.

## அனுபவிப்பு என்பது ஸ்பரிசத்தின் ஒரு விளைவே

அனுபவிப்பு என்பது முழுக்க முழுக்க ஸ்பரிசத்தின் விளைவினாலேயே உருவாகிறது. இந்த அனுபவிப்பானது மனதில் தோன்றியது எனக்கூறினாலும் அதற்கு பௌதீக இயல்புகளும் மனதுடன் தொடர்புற வேண்டும்.

கண்களும் உருவமும் சக்கு விஞ்ஞானயமும் ஒன்று சேரும் போது அனுபவிப்பானது கண்களில் தோன்றுகிறது, அது கண்ணின் ஸ்பரிசத்தினால் உருவாகிய அனுபவிப்பாகும்.

காதும் சப்தமும் சோத்த விஞ்ஞானயமும் ஒன்று சேரும் போது அனுபவிப்பானது காதுகளில் தோன்றுகிறது, அது காதின் ஸ்பரிசத்தினால் உருவாகிய அனுபவிப்பாகும்.

நாசியும் மணமும் காண விஞ்ஞானயமும் ஒன்று சேரும் போது அனுபவிப்பானது நாசியினுள் தோன்றுகிறது, அது நாசியின் ஸ்பரிசத்தினால்

உருவாகிய அனுபவிப்பாகும்.

நாவும் சுவையும் ஜிவ்ஹா விஞ்ஞானயமும் ஒன்று சேரும் போது அனுபவிப்பானது நாவினுள் தோன்றுகிறது, அது நாவின் ஸ்பரிசத்தினால் உருவாகிய அனுபவிப்பாகும்.

உடலும் உடலுணர்வுகளும் காய விஞ்ஞானயமும் ஒன்று சேரும் போது அனுபவிப்பானது உடலினுள் தோன்றுகிறது, அது உடலின் ஸ்பரிசத்தினால் உருவாகிய அனுபவிப்பாகும்.

மனதும் சிந்தனைகளும் மனோ விஞ்ஞானயமும் ஒன்று சேரும் போது அனுபவிப்பானது மனதில் தோன்றுகிறது, அது மனதின் ஸ்பரிசத்தினால் உருவாகிய அனுபவிப்பாகும்.

இவ்வாறான ஸ்பரிசம் ஏற்பட்டவுடனேயே அனுபவிப்பு ஏற்படுகிறது. இன்பமோ, துன்பமோ அல்லது சமநோக்கான அனுபவிப்போ ஏற்படுவதற்கு ஸ்பரிசமே காரணமாக உள்ளது என்பதை நாம் இப்போது உணர்ந்து கொள்ளலாம்.

**அனுபவிப்பானது மாற்றத்திற்கு உள்ளாகிக்கொண்டே இருக்கிறது.**

இந்த அனுபவிப்பு மாற்றமடையக்கூடியதா? இல்லை மாற்றமடையாத ஒன்றா? மாற்றமடையாத ஒன்றானால் துக்க அனுபவிப்பு ஒன்று வந்தால் இது மாற்றமடையாமல் இருக்க வேண்டும் அல்லவா? இந்த துக்கமானது கொஞ்சம் நேரத்திலோ அல்லது கொஞ்ச காலத்திலோ இல்லாமல் போய்விடும். சுகமான அனுபவிப்பு ஏற்பட்டு அது தினமும் இருந்தால் எவ்வளவு

நன்றாக இருக்கும்? ஆனால் சிறிது நேரத்திலே அந்த அனுபவிப்பும் மாற்றமடைந்து செல்கிறது. அதன் பிறகு வேறு விதமான இன்பமான அனுபவிப்போ, துன்பமான அனுபவிப்போ ஏற்படுகிறது. அதுவும் மாற்றமடைந்து விடுகிறது. இந்த அனுபவிப்பானது எந்நேரமும் மாற்றத்திற்குட்படும் ஒன்றாகும்.

எமக்கு எந்நாளும் இன்பத்தை மாத்திரமே தரும் ஒரு உருவம் கிடைத்ததில்லை. அதேபோல் எந்நாளும் துன்பத்தை மாத்திரமே தரும் எவ்வித உருவமும் நாம் கண்டதில்லை. எமக்கு இன்பத்தை மாத்திரமே தரும் சப்தத்தை கேட்டதில்லை அதேபோல் துன்பத்தை மாத்திரம் நிலைநிறுத்தி வைக்கக்கூடிய எவ்விதமான சப்தமும் இதுவரை நாம் கேட்டதில்லை. சப்தத்தினால் ஏற்படும் அனுபவிப்பும் நிலையற்றதொன்றே, நித்தியமான நறுமணமோ, துர்நாற்றமோ இல்லை. மாற்றமுறாத எந்த மணத்தையுமே நாம் சுவாசித்ததில்லை. சுவையும் மாற்றமடைகிறது. மாற்றமுறாத உடலுணர்வுகளும் எமக்கு கிடைத்ததில்லை. மனதில் ஏற்படும் சிந்தனைகள் தரும் அனுபவிப்புகளும் நிரந்தரமற்றவையே. அவ்வாறாயின் அனுபவிப்புகள் என்பது மாற்றத்திற்குள்ளாகும் நிரந்தரமற்றவை என்பது இப்போது எமக்கு தெளிவாகிறது.

## நான் எனும் எண்ணத்தினாலயே எமக்கு தவறியது

இவ்வநித்தியமான அனுபவிப்பை "நான்" என்றுதான் நாம் நினைக்கிறோம். எனக்கு தேவையான முறையில் என் வசத்தில் வைத்து கொள்ள முடியாத அனுபவிப்பினை "எனது அனுபவிப்பு" என்று சொல்ல

முடியாது. மூன்று விடயங்களின் சேர்க்கையால் உருவாகிய அனுபவிப்பு என்னுடையதாவது எப்படி? அவ்வாறாயின் 'நான் இன்பத்தை அனுபவிக்கிறேன்' என்றோ இல்லை 'நான் துன்பத்தை அனுபவிக்கிறேன்' என்றோ ஒன்றில்லை. ஸ்பரிசத்தினால் உருவாகிய அனுபவிப்பே இங்குள்ளது. அனுபவிப்பின் உண்மையை உணரும் போது "நான்" எனும் அறியாமையை நீங்குகிறது. அனுபவிப்பு ஏற்பட்டதன் பின் என்ன நடக்கிறது என்பதை இப்போது பார்ப்போம்

## இணங்கானலை இணங்கண்டு கொள்வோம்.

அனுபவிப்பு ஏற்பட்டதன் பின் அனுபவித்ததை அறிந்து கொள்ளல் அதாவது இணங்காண்பதே நடக்கிறது. இந்த 'இணங்கானல்' என்பதும் ஸ்பரிசத்தினோடுதான் ஏற்படுகிறது. இதனை விளங்கிக்கொள்வதற்காக அனுபவிப்பிற்கு பிறகு இணங்காணல் இடம்பெறுகிறது என நினைப்போம். (இவை வேறுபடுத்தி ஆராய்ந்தாலும் ஸ்பரிசம் ஏற்படும் அதே கணத்திலே இவை ஒன்றாகவே தோன்றுகிறது)

நாம் ஒருவரை சந்தித்தவுடன் சிரிக்கின்றோம். இந்த சந்தர்ப்பத்தில் நாம் அந்த உருவத்தை இணங்கண்டுதான் சிரித்தோம் அல்லவா? ஏதாவது எம் கண்களுக்கு தென்படும் போது அதனை நாம் இணங்காண்கிறோம். இணங்கான முடியாத ஒன்றாயின் 'இணங்காண முடியாது' என்பதையும் அறிந்து கொள்கிறோம். இதுவும் ஒரு இணங்காணலே ஆகும். பாடலொன்று கேட்டவுடன் "ஆ! அது அந்த பாடகரின் நல்ல பாடலொன்று தானே" எனக்கூறுவது நாம் அந்த

சப்தத்தை இணங்கண்டு கொண்டதால்தான். காதுகளை செவிடாக்குவது போன்ற இரைச்சலொன்றை கேட்டால் “ஐய்யோ என்ன இரைச்சல் இது?” என கேட்போம். இவ்வாறு கேட்பதற்கு காரணம் நாம் அந்த சப்தங்களை இணங்கண்டு கொண்டமையே ஆகும். அனுபவித்தல் மற்றும் இணங்கண்டு கொள்ளல் எனும் இவ்விரண்டும் ஒன்றாகவே நிகழ்கின்றது.

**இணங்காண்பது ஸ்பரிசத்தினாலயே...!**

ஸ்பரிசம் தோன்றும் போதே இணங்காண்பதுவும் இடம்பெறுகிறது.

**இவற்றை தவிர வேறு எதுவும் இணங்காண்பதில்லை.**

நாம் இணங்காண்பவை தான் என்ன? காணும் உருவங்கள், கேட்கும் சப்தங்கள், முகரும் மணங்கள், சுவைக்கும் சுவைகள், உணரும் உடலுணர்வுகள் மற்றும் நினைக்கும் எண்ணவலைகள் எனும் இவ் ஆறு விடயங்களை தவிர்ந்த வேறு ஒன்றுமில்லை.

கண்களும் உருவமும் சக்கு விஞ்ஞானயமும் ஒன்று சேரும் போது புலப்படும் உருவத்தை இணங்காண்கிறோம். காதும் சப்தமும் சோத்த விஞ்ஞானயமும் ஒன்று சேரும் போது கேட்கும் சப்தத்தை இணங்காண்கிறோம். நாசியும் மணமும் காண விஞ்ஞானயமும் ஒன்று சேரும் போது முகரும் மணத்தை அடையாளம் காண்கிறோம். நாவும் சுவையும் ஜிவ்ஹா விஞ்ஞானயமும் ஒன்று சேரும் போது சுவைக்கும் சுவையை இணங்காண்கிறோம். உடலும் உடலுணர்வும் காய விஞ்ஞானயமும்

ஒன்று சேரும் போது உணரும் உடலுணர்வுகளை இணங்காண்கிறோம். மனமும் சிந்தனையும் மனோ விஞ்ஞானயமும் ஒன்று சேரும் போது சிந்திக்கும் சிந்தனைகளை இணங்காண்கிறோம். இவ்வாறு இணங்காண்பது ஸ்பரிசத்தினாலயே ஆகும்.

### மாற்றமடையாத இணங்காணல் தான் உண்டோ?

இணங்காண்பதற்கு துணை புரியும் இம்மூன்று விடயங்களுமே அநித்தியமானதாகும். அநித்தியமானவற்றின் சேர்க்கையால் உருவாகிய ஸ்பரிசமும் அநித்தியமாகும். நாம் கண், காது, நாசி, நாவு, உடல், மனம் எனும் இந்த ஆறு புலன்களினாலும் இணங்கானும் அனைத்துமே அநித்தியமானதாகும். அநித்தியமான இணங்காணலை 'நான்', 'எனது', 'என்னுடையது' என ஏற்றுகொள்வதானது, அறியாமையால் ஏற்பட்ட மிகப்பெரிய ஏமாற்றமாகும். அந்த ஏமாற்றத்திலிருந்து மீண்டு சத்தியத்தை உய்த்துணர்வதே எமது நோக்கமாக இருக்க வேண்டும். இவ்வாறு அறியாமையால் எம்மையறியாமலே நிகழும் இந்த இணங்காண்பதினூடாக என்ன நடக்கிறது? என்பதனை நாம் இப்போது பார்ப்போம்.

இணங்காண்பதனை அடிப்படையாக கொண்டுதான் சிந்தனைகள் தோன்றுகிறது. விளங்கிகொள்வதற்கு இலகுவாக நாம் "இணங்காண்பதற்கு பின்னர்தான் சிந்தனை தோன்றுகிறது" என்று கூறினாலும் சிந்தனை தோன்றுவது ஸ்பரிசம் ஏற்பட்ட அதே கணத்திலாகும். ஸ்பரிசம், அனுபவிப்பு, இணங்காணல், சிந்தனை எனும் இவை ஒரே கணத்தில் தோன்றுவதாகும். இவை

நேரத்தினால் குறிப்பிட்டு கூற முடியாத வண்ணம் மிக மிக வேகமாக நிகழுபவையாகும்.

## சிந்தனை என்பது கர்மமாகும்

சிந்தனை எனப்படுவது என்ன? சிந்தனை என்பது கர்மத்திற்காகும். புத்த பகவான் *(சேத்தனாஹங் பிக்கவே கம்மங் வதாமி)* "பிக்குக்களே..! சிந்தனையையே கர்மம் எனக்கூறுவேன்" என மொழிந்தார். அப்படியாயின் ஸ்பரிசம், அனுபவிப்பு, இணங்காணல் எனும் செயற்பாட்டடின் ஒரே விளைவு கர்மம் சேர்வதேயாகும். எமக்கு தெரியாமலே எம்முள் நடக்கும் விபரீதம் எவ்வாறானது என்பதை இப்போது நீங்கள் விளங்கிக்கொண்டிருப்பீர்கள்.

நாம் உருவத்தை பார்க்கும் போது, கண்களும் உருவமும் சக்கு விஞ்ஞானயமும் ஒன்று சேர்கிறது, அந்த உருவத்தை அனுபவிக்கிறோம், இணங்காண்கிறோம், அந்த உருவத்திற்கு ஏற்றாற் போல் சிந்தனை செய்கிறோம். அதனால் கர்மம் உண்டாகிறது.

நாம் சப்தத்தை கேட்கும் போது காதும் சப்தமும் சோத்த விஞ்ஞானயமும் ஒன்று சேர்கிறது, அந்த சப்தத்தை அனுபவிக்கிறோம், இணங்காண்கிறோம், அந்த சப்தத்திற்கு ஏற்றாற் போல் சிந்தனை செய்கிறோம். அதனால் கர்மம் உண்டாகிறது.

நாசியும் மணமும் காண விஞ்ஞானயமும் ஒன்று சேர்கிறது, அந்த மணத்தை அனுபவிக்கிறோம், இணங்காண்கிறோம், அந்த மணத்திற்கு ஏற்றாற் போல் சிந்தனை செய்கிறோம். அதனால் கர்மம் உண்டாகிறது.

நாவும் சுவையும் ஜிவ்ஹா விஞ்ஞானயமும் ஒன்று சேர்கிறது, அந்த சுவையை அனுபவிக்கிறோம், இணங்காண்கிறோம், அந்த சுவைக்கு ஏற்றாற் போல் சிந்தனை செய்கிறோம். அதனால் கர்மம் உண்டாகிறது.

உடலும் உடலுணர்வுகளும் காய விஞ்ஞானயமும் ஒன்று சேர்கிறது, அந்த உடலுணர்வை அனுபவிக்கிறோம், இணங்காண்கிறோம், அந்த உடலுணர்விற்கு ஏற்றாற் போல் சிந்தனை செய்கிறோம். அதனால் கர்மம் உண்டாகிறது.

மனமும் எண்ணங்களும் மனோ விஞ்ஞானயமும் ஒன்று சேர்கிறது, அந்த எண்ணங்களை அனுபவிக்கிறோம், இணங்காண்கிறோம், அந்த எண்ணங்களுக்கு ஏற்றால் போல் மேழும் சிந்தனை செய்கிறோம். அதனால் கர்மம் உண்டாகிறது.

## புரிந்துகொள்ளாவிடில் பிறவிக்கடலிலே மூழ்கிவிட வேண்டியதுதான்

கர்மம் உருவாகுவதெப்படி என்பதை இப்போது புரிந்து கொண்டீர்களா? எவ்விதமான சிந்தனைகள் உருவாகினாலும் அதனால் கர்மம் தான் உருவாகிறது. அப்படியானால் நாமிருப்பது கர்மத்தின் மேல், அதேபோல் கர்மம் இருப்பது துக்கத்தின் மேலாகும். இவை தெரியாத மக்கள் தொடர்ந்தும் முடிவில்லாத இந்த துக்கத்தினூடாகவே தம் வாழ்வினை கொண்டு செல்கின்றனர். இந்த செயற்பாட்டை தெரிந்து கொண்டவர் புதிதாக கர்மங்கள் உருவாகிற போதும் தான் துக்கத்தில் மத்தியில் இருந்தாலும், அதனிலிருந்து மீள்வதற்கான வழியை தேடுவார். துன்பத்தில் இருந்து

நீங்கும் வழியானது ஸ்ரீ சத்தர்மத்திலே உள்ளது. இந்த துக்கத்திலிருந்து விடுபட நினைப்பவரே தர்மத்தை தேடியலைவார். ஆனால் அந்த தேவை உண்மையான தேவையாக இருக்க வேண்டும். இது தொடர்பாக தேடும் ஒருவருக்கு முன்னர் குறிப்பிட்ட சுதா, ததா, வச்சசா பரிசிதா, என்பன பழக்கப்படுத்தும் போது மனசானுபெக்கிதா, திட்டியா சுப்படிவித்தா என்பன தோற்றம் பெறும்.

## சிந்தனையிலுள்ள நுண்ணியமான செயற்பாடு

சிந்தனையினுள் கர்மம் உருவாவதன் நுண்ணியத்தன்மையை தொடர்பாக தெரிந்து கொள்ள புத்த பகவான் அழகியதொரு கதையை மொழிந்தருளினார்.

ஒரு காலத்தில் தேவர்களுக்கும் அசுரர்களுக்கும் யுத்தம் ஒன்று நிகழ்ந்தது. தேவர்ககள் அசுரர்களை விட உயர்ந்தவர்கள். தேவர்களின் தலைவர்தான் இந்திரன். அசுரர்களின் தலைவர்தான் வேப்பசித்தி. இந்த யுத்தத்தின் போது தேவர்கள் வெற்றி பெற்றால் வேப்பசித்தியை கைது செய்ய தேவர்கள் திட்டமிட்டனர். அதேபோல் அசுரர்கள் வெற்றிபெற்றால் இந்திரனை கைது செய்ய அசுரர்கள் திட்டமிட்டனர்.

யுத்தத்தின் முடிவில் அசுரர்கள் தோல்வியடைந்தார்கள். தேவர்கள் அசுரர்களின் தலைவனான வேபசித்தியை கழுத்து, கைகள், கால்கள் என்பன கட்டியிருக்கி தேவசபைக்கு கொண்டு வந்தார்கள். தண்டனைக்கு உரித்தான அசுரவேந்தனை தேவர்கள் கட்டியது கயிற்றினாலோ

அல்லது சங்கிலிகளாலோ அல்ல. தேவர்கள் சிந்தனை ஒன்றினாலே அசுரனை கட்டுப்படுத்தி வைத்திருந்தனர். இவ்வாறு கைது செய்யப்பட்ட அசுரன், *“தேவர்கள் மிகவும் தார்மீகமானவர்கள். இவர்கள் நல்லவர்கள் அதனால் தேவர்களோடு எனக்கு இருக்கவிருந்தால் எவ்வளவு நல்லம்”* என நினைப்பான். அவ்வாறு நினைக்கும் போது கழுத்து, கைகள், கால்கள், என்பன இருக்கி இருக்கும் அந்த பிணைப்பானது அவிழ்ந்து அவருக்கு தெய்வீக சுகங்கள் தோற்றம் பெறும். அப்போது அந்த அசுரன் இவ்வாறு நினைப்பான். *”தேவர்களை விட எனக்கு அசுரர்கள் மேலானவர்கள். இப்போது எப்படியாவது அசுரலோகத்திற்கு செல்ல வேண்டும்.”* இவ்வாறு நினைத்து முடிக்கும் போதே மீண்டும் கழுத்து, கைகள், கால்கள் என்பன இருக்கி அந்த பிணைப்பு ஏற்பட்டுவிடுகிறது. இந்த பிணைப்பானது முழுக்க முழுக்க மானசீகமான ஒரு பிணைப்பாகும். சிந்தனையிலான ஒரு பிணைப்பாகும். அதன்படி பார்க்கும் போது இந்த சிந்தனையின் சூட்சுமத்தை நாம் அறிந்து கொள்ளலாம். இந்த அனைத்து விடயங்களுமே சிந்தனையுள் இடம்பெறும் விடயங்கள் என்பதை நாம் அறிந்து கொண்டோம்.

## அனைத்தும் பிணைக்கப்பட்டது இந்த சிந்தனைகளினாலயே

இந்த பிறப்பு, இறப்பு எனும் சன்சார பயணத்திற்கு துணையாக இருக்கும் பிணைப்பு எனும் விடயமானது மானசீகமாக இடம்பெறும் ஒன்று என புத்தபகவான் மொழிந்தார். நன்றாக சிந்தித்து பாருங்கள் நாம் எமது பிள்ளைகள் மீது, வீடுவாசல்கள் மீது, உறவினர்கள் மீது, எம் நாட்டின் மீது, இனத்தின் மீது பிணைந்துள்ளது

சிந்தையினால் தானே. இவ்வனைத்து விடயங்களுக்கும் நாம் சிந்தனையினாலே பிணைந்துள்ளோம்.

"இந்த மனதில் ஏற்படும் பிணைப்பானது மிக மிக நுண்ணியமானது" என புத்த பகவான் மொழிந்தார். எம்மை இந்த பிறவிச்சக்கரத்தில் பிணைத்திருக்கும் மாரனின் பிணைப்பு அதனிலும் நுண்ணியமானதாகும். இவ்வுலகில் மாரன் என்று ஒருவர் இருக்கிறார். எம்மை இந்த பிறவி சக்கரத்தில் பிணைத்து வைத்திருப்பது இந்த மாரனின் பிணைப்பாகும். இந்த பிணைப்பிலிருந்து விடுபடும் நாள் தான் எமது இந்த பிறவி பயணத்தின் விடுதலை. இந்த நுண்ணிய பிணைப்பை அவிழ்பதற்கு நாம் அநித்தியம், துக்கம், அநாத்மம் என இவற்றின் யதார்த்தத்தை உய்த்துணர வேண்டும்.

## சுவர்க்கமும் நரகமும் மனதினாலயே

கர்மம் உருவாகுவது மனதின் மூலமே என்பதை நாம் நன்கு அறிந்து கொண்டோம். ஆனாலும் மனது என்பது இதுதான் என சுட்டிக்காட்ட முடியாது. என்றாலும் அனைவரும் துன்பமடைவதும் இந்த மனதினாலயே. மனதில் உருவாகுபவையிட்டே துக்கமடைகிறோம். அப்படியாயின் மனதில் உருவாபவையிட்டே இந்த துக்கத்திலிருந்து விடுபட முடியும். மனதில் உருவாகுவது கொடூரமானதானால் அதனால் துன்பத்தை அனுபவிக்கின்றோம். மரணத்தின் பின் நரகத்தில் பிறக்கின்றோம். மனதில் நன்மையான விடயங்கள் தோன்றினால் சுகத்தையே அடைகின்றோம். மரணத்தின் பின்னர் சுவர்கத்தில் பிறக்கின்றோம். இவ்வனைத்து செயற்பாடுகளுக்கும் மனமே முதன்மை

பெறுகிறது.

## இவற்றையா கைவிட முடியாமல் தவிக்கின்றோம்?

இவை நிரந்தரமானவை என நாம் சொத்துக்கள், வாகனங்கள், பணம், கீர்த்தி என்பவற்றை நினைத்து கொண்டிருக்கிறோம். ஏனையோரும் இவற்றின் மூலம் முன்னேற்றத்தை அடையலாம் என்று, அவற்றின் பின்னே ஓடிக்கொண்டிருக்கின்றனர். இவ்வனைத்துமே மனதில் தோன்றும் பிணைப்புக்களேயாகும். பிணைப்பு ஒன்று மனதில் தோன்றினால் அதுதான் கர்மம். இவ்வனைத்து பிணைப்புக்களிலிருந்தும் நாம் நீங்கும்போது எமக்கு பலனளிக்க கர்மங்கள் இருப்பதில்லை. இவ்வாறாக நாம் அனைத்திலும் இருந்து விடுதலை அடைந்த போது தான் "என்னால் இம்மாதிரியான விடயங்களை யா கைவிட முடியாமல் இருந்தது" என தோன்றும்.

## குசல (நன்மையான) அகுசல (தீமையான) கர்மங்கள் உருவாவது இப்படியே...!

மனதில் உருவாகும் சிந்தனை கர்மமாகும். மனதில் உள்ள பிணைப்பின் காரணமாக சிந்தனையில் கர்மம் தோன்றுகிறது. மனதினுள்ளே இருக்கும் பிணைப்பினால் சிந்தனையினுள் ஆசை உருவாகிறது. கோபம், அறியாமை என்பனவும் இவ்வாறுதான்.தோற்றம் பெறுகிறது. அதேபோல் கருணை, அனுதாபம், அன்பு என்பன தோற்றம் பெறுவதும் இந்த சிந்தனையினால்தான். இவ்வனைத்து சிந்தனையிலுள்ளும் கர்மம் உருவாகிறது. நன்மையான சிந்தனையுடையவராக இருப்பின் குசல (நன்மையான) கர்மங்களும் தீமையான சிந்தையுடைவராக இருப்பின்

அகுசல (தீமையான) கர்மங்களும் உருவாகின்றன. அகுசல கர்மங்களால் துன்பத்தை தரும் தீய பிரதிபலன்களும், குசல கர்மங்களால் நன்மையான பிரதிபலன்களும் உருவாகின்றன. இதன் மூலம் மனதை மென்மேழும் விருத்தி செய்து கொள்ளலாம். மனத்தை விருத்தி செய்து கொள்வதற்கு உருவம், அனுபவிப்பு, இணங்காணல், சிந்தனை, விஞ்ஞானயம் என்பவை தொடர்பான தெளிவான அறிவு வேண்டும். அநித்தியத்தை உய்த்துணர்ந்து கொள்ள வேண்டும்.

**சங்கதம்**.

நிரந்தரமற்றவைக்குரிய இலட்சணங்கள் யாவை? புத்த பகவான் நிரந்தமற்றவைகளின் மூன்று இலட்சணங்களை தெளிவாக மொழிந்துள்ளார். அவையாவன.

*"உப்பாதோ பஞ்ஞாயதி"* உருவாகுவதை (தோற்றத்தை) காணலாம்.

*"வயோ பஞ்ஞாயதி"* அழிவதை காணலாம்

*"டிதஸ்ஸ அஞ்ஞதத்தங் பஞ்ஞாயதி"* மாற்றங்களை கொண்ட நிலவுதலை காணலாம்.

அநித்தியமானவைக்கு புத்த பகவான் 'சங்கதம்' எனும் சொல்லை உபயோகித்தார் மேற்குறிப்பிட்ட மூன்றுமே சங்கதத்தின் இலட்சணங்களாகும்.

தோற்றமடைந்த அனைத்துமே மாற்றத்திட்குள்ளாகும்.

இந்த சங்கதத்தின் இலட்சணங்கள் எமது கண்ணிலும், சக்கு விஞ்ஞானயத்திலும் உள்ளது.

காதிலும், சோத்த விஞ்ஞானயத்திலும் உள்ளது. நாசியிலும், காண விஞ்ஞானயத்திலும் உள்ளது. நாவிலும், ஜிவ்ஹா விஞ்ஞானயத்திலும் உள்ளது. உடலிலும், காய விஞ்ஞானயத்திலும் உள்ளது. நால்வகை மகா தாதுக்களால் உருவாகிய அனைத்திலும் உள்ளது. ஸ்பரிசத்திலும், அனுபவிப்புகளிலும் இணங்காண்பவைகளிலும் உள்ளது. ஆசைகளிலும், பிணைப்புகளிலும், பிறப்பு இறப்புகளிலும் கூட இந்த சங்கதத்தின் இலட்சணங்கள் உள்ளன.

நால்வகை மகா தாதுக்களால் உருவாகிய உருவங்கள் காலத்துக்குரியதாகும். சங்கதத்தின் இலட்சணங்கள் இருப்பதாலயே ‘காலம்’ என்று ஒன்றுள்ளது. உருவாகியதொன்று மாற்றங்களையுடைய நிலவுதலை கொண்டிருந்து அழிந்து போவது இறந்தகாலமாகும். இறந்தகாலம் என்று ஒன்று இருப்பது அநித்தியத்தினாலயே! குறிப்பிட்டதொன்று இன்னும் தோன்றவில்லை. உருவாகுவதற்குரிய அறிகுறிகள் உண்டு. அதுவும் தோன்றியவுடன் மாற்றங்களையுடைய நிலவுதலை கொண்டிருப்பதை காணலாம். அதேபோல் அழிவையும் காணலாம் இதுவே எதிர்காலமாகும். தோற்றம்பெற்று மாற்றங்களையுடைய நிலவுதலை கொண்டு அழிந்து கொண்டு போகும் இக்காலமே நிகழ்காலமாகும். இந்த சங்கதத்தின் இலட்சணங்கள் இடம்பெற்றிருப்பதாயின் அது இறந்தகாலமாகும். சங்கதத்தின் இலட்சணங்கள இடம்பெற்றுகொண்டிருப்பதாயின் அது நிகழ்காலமாகும். சங்கதத்தின் இலட்சணங்கள் இடம்பெறுவதற்குரிய அறிகுறிகள் இருப்பதாயின் அது எதிர்காலமாகும்.

அப்படியாயின் இந்த அநித்தியமானவை காலத்திற்குரியவையாகும்.

### தர்மம் காலத்திற்குட்பட்டதல்ல

புத்த பகவானின் தர்மமானது காலத்திற்கு உட்பட்டதொன்றல்ல. இந்த தர்மத்தில் எடுத்துகாட்டப்படுபவை இறந்தகாலம், நிகழ்காலம், எதிர்காலம் எனும் முக்காலத்திற்குரியவையாகும்.

அனுபவிப்பு ஏற்படுவது ஸ்பரிசத்தினால் என்பதை எமக்கு தெரியும். இற்றைக்கு கோடிக்கணக்கான வருடங்களுக்கு முன்பும் அனுபவிப்பு தோன்றியது ஸ்பரிசத்தினாலயே! எதிர்காலத்தில் தோன்றும் மைத்ரீ புத்தபகவானது காலத்திலும் அனுபவிப்பு தோன்றுவது ஸ்பரிசத்தினாலயே ஆகும். இந்த செயற்பாடு காலத்திற்குரியதல்ல. இது தொடர்பான உய்த்துணர்வும் காலத்திற்குரியதல்ல. எவராவது ஒருவர் இந்த அனுபவிப்புக்களிலுள்ள யதார்தத்தை உய்த்துணர்ந்து ஆசையை நீக்கும் போது இந்த பிறவிப்பெருங்கடலில் இருந்து அவரால் மீள முடியும். அது அன்றும் செய்ய முடியுமானதாக இருந்தது. இன்றும் நாளையும் கூட செய்ய முடியுமானதாகும். தர்மம் காலத்திற்குட்படாதது எனக்கூறுவது அதனாலயே. தர்மம் சங்கதம் அல்ல.

### அவகாசம்.

அவகாசம் என்பது எம் சூழலுக்கே. நாம் இதுவரை பார்த்த எல்லா விடயங்களும் அசகாசத்திற்குரியவையாகும். இவை நம்முடையது பிறருடையது என நிலைத்துள்ளன. நால்வகை மகா

தாதுக்களால் உருவாகிய 'நான்' எனும் உருவம் ஒன்று எம்மிடமுள்ளது. அதேபோல் 'ஏனையோர்' எனப்படும் உருவங்களும் உள்ளன. அனுபவிப்புகளும் 'நான் அனுபவிக்கிறேன்' - 'பிறர் அனுபவிக்கிறார்கள்' எனவும், 'நான் இணங்கண்டு கொள்கிறேன்' - 'பிறர் இணங்கண்டுகொள்கின்றனர்' எனவும் வகைப்படும். விஞ்ஞானயமும் 'என்னுடையது' 'பிறருடையது' என வகைப்படும்.

அடுத்ததாக கடினமானது, நுண்ணியமானது என இருவகையுண்டு. உருவம், அனுபவிப்பு, இணங்காணல், சிந்தனை, விஞ்ஞானயம் எனும் அனைத்திலும் இவையுண்டு.

நுண்ணியமான, மென்மையான உருவங்கள் எனப்பார்க்கும் போது தேவர்களின் உடலை உதாரணமாக கூறலாம். அதேபோல் எம்மை கடினமான உருவங்களை கொண்டவர்களாக கூறலாம். அடுத்ததாக தாழ்வு, உயர்வு அதாவது நன்மை, தீமை என இருவகை உண்டு. அடுத்ததாக அண்மை, சேய்மை என இருவகை உண்டு. நாம் இங்கிருக்கிறோம். அதேபோல் அமெரிக்கா என்று ஒன்றுள்ளது அங்கும் உருவங்கள் உண்டு, இங்கும் உண்டு. அப்படியாயின் அண்மை சேய்மையில் இருப்பவையும் அநித்தியமே!

இவ்வாறு நாம் அவகாசத்தின் இருப்பை பற்றியே மிகவும் சுருக்கமாக பார்த்தோம். புத்தபகவானால் மொழியப்பட்ட தன்னுடையது எனக்கூறப்படும் உள்ளகம் மற்றும் பிறருடையது எனக்குகூறப்பட்டவை. கடினமானவை - நுண்ணியமானவை, நன்மையாவை

தீமையானவை, அண்மை - சேய்மை தொடர்பாக இப்போது உங்களுக்கு தெளிவாகிறது அல்லவா? இதுதான் அவகாசத்தின் இருப்பாகும்.

## ஸ்கந்தம்

மேற் கூறப் பட் டவை காலத் தினதும் அவகாசத்தினதும் இருப்பை பற்றியே ஆகும்.

காலம் - இறந்தகாலம், நிகழ்காலம், எதிர்காலம்

அவகாசம் - தன்னுடையது, பிறருடையது, கடினமானவை நுண்ணியமானவை, நன்மையாவை தீமையானவை, மற்றும் அண்மையானவை சேய்மையானவை.

இந்த காலத்திற்கும் அவகாசத்திற்கும் இடைப்பட்ட நிலவுதலையே ‘ஸ்கந்தம்’ என புத்த பகவான் மொழிந்தார்.

ரூப(உருவ) ஸ்கந்தம் - இறந்தகால, நிகழ்கால, எதிர்காலத்திற்குரிய தன்னுடைய - பிறருடைய, கடினமான - நுண்ணியமான, நன்மையான - தீமையான, அண்மையான - சேய்மையான ஏதாவது உருவம் இருப்பின் அது ரூபஸ்கந்தமாகும்.

வேதனா ஸ்கந்தம் - இறந்தகால, நிகழ்கால, எதிர்காலத்திற்குரிய தன்னுடைய - பிறருடைய, கடினமான - நுண்ணியமான, நன்மையான - தீமையான, அண்மையான - சேய்மையான ஏதாவது அனுபவிப்பு இருப்பின் அது வேதனா ஸ்கந்தமாகும்

சஞ்ஞா ஸ்கந்தம் - இறந்தகால, நிகழ்கால, எதிர்காலத்திற்குரிய தன்னுடைய - பிறருடைய,

கடினமான - நுண்ணியமான, நன்மையான - தீமையான, அண்மையான - சேய்மையான ஏதாவது இணங்காணல் இருப்பின் அது சஞ்ஞா ஸ்கந்தமாகும்.

சங்ஸ்கார ஸ்கந்தம் - இறந்தகால, நிகழ்கால, எதிர்காலத்திற்குரிய தன்னுடைய - பிறருடைய, கடினமான - நுண்ணியமான, நன்மையான - தீமையான, அண்மையான - சேய்மையான ஏதாவது சிந்தனை இருப்பின் அது சங்ஸ்கார ஸ்கந்தம் எனப்படும்.

விஞ்ஞான ஸ்கந்தம் - இறந்தகால, நிகழ்கால, எதிர்காலத்திற்குரிய தன்னுடைய - பிறருடைய, கடினமான - நுண்ணியமான, நன்மையான - தீமையான, அண்மையான - சேய்மையான ஏதாவது ஒரு விஞ்ஞானயம் இருப்பின் அது விஞ்ஞான ஸ்கந்தமாகும்.

**பஞ்ச உபாதானஸ்கந்தம்.**

ரூப, வேதனா, சஞ்ஞா, சங்ஸ்காரம், விஞ்ஞானயம் எனும் ஐந்தும் ஆசையினால், விருப்பினால் எம்முள் தோன்றுகிறது. பஞ்ச உபாதானஸ்கந்தம் எனக்கூறுவது ரூப உபாதானஸ்கந்தம், வேதனா உபாதானஸ்கந்தம், சஞ்ஞா உபாதானஸ்கந்தம், சங்ஸ்கார உபாதானஸ்கந்தம், விஞ்ஞான உபாதானஸ்கந்தம் எனும் இந்த ஐந்திற்குமாகும். காலம் மற்றும் அவகாசத்தின் நிலவுகை மற்றும் பஞ்ச உபாதானஸ்கந்தங்கள் தொடர்பான சுருக்கமான விளக்கமே இங்குள்ளது. இது தொடர்பாக மேலும் நீங்கள் எதிர்காலத்தில் அறிந்து கொள்ளலாம்.

அப்படியாயின் நாம் கண்களால் உருவத்தை

பார்க்கும் போது அங்கு பஞ்ச உபாதானஸ்கந்தமே தோன்றியுள்ளது. காதால் சப்தத்தை கேட்டவுடன் அங்கு பஞ்ச உபாதானஸ்கந்தமே தோன்றியுள்ளது. நாசியில் மணம், நாவினில் சுவை, உடலினுள் உடலுணர்வு, மனதினுள் சிந்தனைகள் என்பவற்றினூடாக பஞ்ச உபாதானஸ்கந்தத்தை தவிர வேறு ஒன்றும் உருவாகவில்லை.

## நான் என்று ஒருவரா?

பஞ்ச உபாதானஸ்கந்தங்கள் தோன்றும் செயற்பாட்டில் 'நான்' என்று ஒருவரை நாம் ஏற்றுகொள்ளுவதே சக்காய திட்டியாகும். கண்களால் ஒரு உருவத்தை பார்த்து அதனை என்னுடையது என ஏற்றுகொள்கிறோம். நாம் விரும்புவதொன்றாயின் அதனை என்னுடையது என வசப்படுத்த முயற்சி செய்கின்றோம். அந்த உருவத்தின் அழகை பார்த்து அதனை அனுபவிக்கிறோம். சப்தமொன்றை கேட்டவுடன் 'அழகான சப்தம்' என அதனை அனுபவிக்கிறோம். இந்த சப்தம் 'தனக்கு சுகமானது' என ஏற்றுக்கொள்கிறோம். நறுமணம் ஒன்றை முகர்ந்தவுடன் தனக்கு 'சுகமளிக்கும் மணம்' என அறிந்து கொள்கிறோம். சுவை ஒன்றை உணரும் போது 'எனக்கு நல்ல சுவையாக இருக்கிறது' என ஏற்றுக்கொள்வதோடு 'எனக்கு இன்னுமின்னும் இந்த சுவை வேண்டும்' என நினைக்கவும் செய்கிறோம். உடலுணர்வொன்றை உணரும்போதும் இது சுகமானதாக இருப்பின், 'எனக்கு நல்ல சுகமான உணர்வு' என அதனை ஏற்றுக்கொள்கிறோம். 'இந்த உணர்வு என்னுடையது' என எந்நாளும் அதனை எதிர்பார்க்கவும் செய்கிறோம். இவ்வனைத்தையும் 'என்னுடையது'

எனும் உணர்விலிருந்து சிந்தனை செய்கிறோம். அந்த சிந்தனை செய்யும் மனதும் 'என்னுடைது' என நினைக்கின்றோம். இந்த சிந்தனைகளையும் 'என்னுடையது' என ஏற்றுக்கொள்கிறோம். இந்த உருவங்களையும் சப்தங்களையும் மணங்களையும் சுவைகளையும் உடலுணர்வுகளையும் சிந்தனைளையும் 'நான் அனுபவிக்கிறேன்', 'நான் இணங்கான்கிறேன்', அதன்படி 'நான் சிந்தனை செய்கிறேன்' என நினைக்கிறோம். 'என்னுடைய வசத்திலே வைத்திருக்க வேண்டும்' எனவும் நினைக்கிறோம். இதுவே துன்பத்தை ஏற்படுத்துவதாக இருந்தால் 'நான் துன்பத்தை அனுபவிக்கிறேன்'. துன்பத்தையும் 'என்னுடையது' என ஏற்றுகொள்வோம். இவ்வாறாக நினைப்பது அதாவது நான், எனது, என்னுடையது என நினைப்பது தான் சக்காய திட்டியாகும்.

## நான் என்பது முழுமையான ஒரு பொய்யே!

கண், காது, நாசி, நாவு, உடம்பு, மனம் எனும் ஆறும் 'என்னுடையது' என்று இருந்தால் அது எனக்கு தேவையான முறையில் இருக்கவேண்டுமல்லவா? இவ்வாறிருப்பதில்லை அது மாற்றங்களுக்குள்ளாகி இறுதியில் அழிந்து போய்விடுகிறது. 'நான் அனுபவிக்கும்' ஒன்றாயின் அதனை எனக்கு தேவையான முறையில் அனுபவிக்க கூடியதாக இருக்கவேண்டும். ஆனாலும் சுகமான அனுபவிப்புகள் எந்நேரமும் இருப்பதில்லை. துக்கம் கூட அப்படித்தான். அனுபவிப்பு என்பதும் அநித்தியமானதே! எமக்கு தேவையான முறையில் அவையிருப்பதில்லை. இணங்காண்பதுவும் 'நான்' எனும் ஒருவரால் என்றால் நாம் விரும்பும் ஒன்றை மாத்திரம்

இணங்காணக்கூடியதாக இருக்கும். இணங்காண்பதுவும் அநித்தியமாகிவிடும். இவையனைத்திலும் 'நான்' இல்லாவிடில் 'என்னுடையது' எனும் உணர்வோடு சிந்தனை செய்வது மிகப்பெரிய ஏமாற்றம் தானே! மனம் எமக்கு தேவையான வகையிலா இருக்கிறது? மனம் என்னுடையது என நினைத்தாலும் மனம் இயங்குவது மனதிற்கு ஏற்றபடியே. அப்படியாயின் நான், எனது, என்னுடையது என நினைத்து கொண்டிருப்பது முழுமையான பொய்யே ஆகும். இவை காரணங்களினால் உருவாகிய பலன்களே அன்றி நான், எனது, என்னுடையது என யாருமில்லை.

## மூட நம்பிக்கைகளை உடைக்கும் சத்தியம்.

"உருவங்கள் நால்வகை தாதுக்களாலே உருவாகியுள்ளது" என உய்த்தறியும் நாளில் உருவங்களின் மீது நாம் கொண்டுள்ள மூடநம்பிக்கைகள் அழிந்துவிடும்.

"ஸ்பரிசத்தினாலயே அனுபவிப்பு தோன்றுகிறது" என்பதனை நாம் வாழ்வில் உய்த்தறிந்து கொள்ளும் போது, அனுபவிப்பின் மீது நாம் கொண்டுள்ள மூடநம்பிக்கைகள் அழிந்துவிடும்.

"ஸ்பரிசத்தினாலயே இணங்காணல் தோன்றுகிறது" என்பதனை நாம் வாழ்வில் உய்த்தறிந்து கொள்ளும் போது, இணங்காணல் மீது நாம் கொண்டுள்ள மூடநம்பிக்கைகள் அழிந்துவிடும்.

"ஸ்பரிசத்தினாலயே சிந்தனைகள் தோன்றுகிறது" என்பதனை நாம் வாழ்வில் உய்த்தறிந்து கொள்ளும்

போது, நாம் சிந்தனைகள் மீது கொண்டுள்ள மூடநம்பிக்கைகள் அழிந்துவிடும்.

"நாமரூபத்தினாலே விஞ்ஞானயம் தோன்றுகிறது" என்பதனை நாம் வாழ்வில் உய்த்தறிந்து கொள்ளும் போது, நாம் விஞ்ஞானயம் மீது கொண்டுள்ள மூடநம்பிக்கைகள் அழிந்துவிடும்.

நான், எனது, என்னுடையது எனும் மூடநம்பிக்கையை நாம் மூடநம்பிக்கையாகவே ஏற்றுகொள்ளவேண்டும். இந்த மூடநம்பிக்கை அல்லது மகா பொய்மையிலிருந்து மீள வேண்டும். இதன் யதார்த்தத்தை உய்த்துணரும் போது சக்காய திட்டி எம்மிளிருந்து நீங்கிவிடும்.

### தனக்கு தானே இல்லாவிடில் வேறு யார்..?

சக்காய திட்டி எம்முள் ஆணிவேராக நிலைத்திருக்கும் வரை அந்த மானசீகம் எம்மை நால்வகை நரகங்களுக்கு இட்டுச்செல்ல வல்லது. அதனால்தான் புத்தபகவான், "அத்தாஹி அத்தனோ நத்தி" (தனக்கு தானே இல்லை) என மொழிந்தருளினார் நான், எனது, என்னுடையது எனும் நம்பிக்கை அழிய வேண்டுமாயின், 'அஞ்ஞானம்' அழிய வேண்டும். அஞ்ஞானம் எனப்படுவது நாற்பேருண்மைகள் தொடர்பான அறிவின்மையாகும். பஞ்ச உபாதானஸ்கந்தங்களில் இடம்பெறும் யதார்த்தத்தை அறியாமையே ஆகும். சக்காய திட்டி அழிய வேண்டுமாயின், அஞ்ஞானம் தோன்றும் இடத்தில் அந்த அஞ்ஞானம் அழியும் வண்ணம் உய்த்துணரல் அவசியமாகும்.

அஞ்ஞானம் தோன்றியது உருவம் (ரூபம்) தொடர்பாகவென்றால், உருவத்தின் மீது மெய்யறிவு தோன்ற வேண்டும்.

அஞ்ஞானம் தோன்றியது (வேதனா) அனுபவிப்பு தொடர்பாகவென்றால், அனுபவிப்பு மீது மெய்யறிவு தோன்ற வேண்டும்.

அஞ்ஞானம் தோன்றியது (சஞ்ஞா) இணங்காணல் தொடர்பாகவெனில், இணங்காணல் மீதான மெய்யறிவு தோன்ற வேண்டும்.

அஞ்ஞானம் தோன்றியது (சங்ஸ்கார) சிந்தனைகள் தொடர்பாகவெனில், சிந்தனைகள் மீதான மெய்யறிவு தோன்ற வேண்டும்.

அஞ்ஞானம் தோன்றியது விஞ்ஞானயம் தொடர்பாகவெனில், விஞ்ஞானயம் மீதான மெய்யறிவு தோன்ற வேண்டும்.

அஞ்ஞானம் தோன்றுவது எவ்வகையில் என்பதை நன்றாக அறிவால் சிந்தித்து அறிந்து கொள்ள வேண்டும்.

**உண்மையை உணர அறிவால் ஆராய வேண்டும்.**

பஞ்ச உபாதானஸ்கந்தங்கள் மீதான உண்மை நிலையை ஒருவர் உய்த்றிந்து கொள்வாராயின் அன்று நான், எனது, என்னுடையது எனும் மனப்பான்மை அவரை விட்டு நீங்கிவிடும். அதுவே அதனால் கிடைக்கும் பிரதிபலன். கண், காது, நாசி, நாவு, உடல், மனம் என்பவற்றனூடாக பஞ்ச உபாதானஸ்கந்தங்கள்

என்றால் என்ன என்பதனை அறிவால் ஆராய்வது தான் அதற்கான உன்னதமான வழி.

### அறிவால் ஆராய்வது இப்படித்தான்

உருவம் என்றால் என்ன? அனுபவிப்பு என்றால் என்ன? இணங்காணல் என்றால் என்ன? சிந்தனை என்றால் என்ன? விஞ்ஞானயம் என்றால் என்ன? என்பதனை புத்த பகவானது தர்மத்தினூடாக உணர்ந்து கொள்ளவேண்டும். உருவமானது நால்வகை தாதுக்களால் உருவாகியது. அதனை 'நான்' என்றோ, ' என்னுடையது' என்றோ, 'என்' கட்டுப்பாட்டில் வைத்திருக்க முடியாது. அனுபவிப்பானது ஸ்பரிசத்தினால் தோற்றம் பெற்றது அதனை 'நான்' என்றோ, 'என்னுடையது' என்றோ என் கட்டுப்பாட்டில் வைத்திருக்க முடியாது. அதேபோல் தான் இணங்காண்பது, சிந்தனை என்பன ஸ்பரிசத்தினால் தோற்றம் பெற்றது. விஞ்ஞானயம் என்பது நாமரூபத்தினால் உருவாகியது. இவற்றை 'நான்' என்றோ, 'என்னுடையது' என்றோ என் கட்டுப்பாட்டில் வைத்திருக்க முடியாது. இதனை அறிவால் ஆராய்வதன் மூலம் இதன் செயற்பாட்டை தன்னுள் உய்த்தறிந்து கொள்ளும் போது சக்காய திட்டியிலிருந்து எம்மால் நிரந்தரமாகவே நீங்ககூடியதாக இருக்கும்.

இங்கு கூறப்பட்ட அனைத்து விடயங்களுமே புத்தபகவானின் போதனைகளில் குறிப்பிடப்பட்டுள்ளவேயே ஆகும். புத்த பகவானால் மொழியப்பட்ட போதனைகள் மீது அவநம்பிக்கை ஏற்பட்டதென்றால் அது எமக்குதான் பாரிய இழப்பை ஏற்படுத்தும். நாம் எமது ஆன்மீக தலைமைத்துவமாக

தெரிவு செய்தது, இந்த உன்னதமான தலைவராயின் அவர் மொழிந்த வழியில் பயணித்து இவ்வனைத்து துன்பங்களிலிருந்தும் விடுதலை பெறும் பாக்கியம் எம் அனைவருக்கும் கிடைப்பதாக. !

**சாது! சாது!! சாது!!!**

நமோ தஸ்ஸ பகவதோ அரஹதோ சம்மாசம்புத்தஸ்ஸ
அந்த பாக்கியமுள்ள அரஹத் சம்மாசம்புத்த பகவானுக்கு எனது நமஸ்காரமாகட்டும்!

# 03.

# உன்னதமான தலைவரின் வழிமுறையை பின்பற்றுவோம்.

நாம் இதுவரை கற்ற பஞ்ச உபாதானஸ்கந்தங்களின் செயற்பாட்டை நாம் எப்பொழுதும் அறிவால் ஆராய்ந்து உய்த்துணர முயற்சி செய்ய வேண்டும். மனது சமாதியை கொண்டிருந்தால் இதனை எளிதாக உய்த்துணரலாம். அவ்வாறில்லாவிடிலும் இது தொடர்பாக மனதினால் ஆராயும் போது இதன் உண்மை நிலையை விளங்கிக்கொள்ள கூடியதாக இருக்கும்.

எம் மனதில் ஆசை ஏற்படும் போது ஏன் அவ்வாறு ஆசை தோன்றுகிறது? எம் மனதில் கோபம் ஏற்படும் போது ஏன் அவ்வாறு கோபம் தோன்றுகிறது? நாம் ஏமாறும் போது ஏன் இவ்வாறான அறியாமை எம்மிடம் தோன்றுகிறது? என அறிவால் ஆராயும் போது தான் ஞானம் வளரும். இது முழுக்க

முழுக்க ஞானத்தை விருத்தி செய்வதற்கானதொரு செயற்பாடாகும். இதற்கு உறுதுணையாக இருப்பது தான் மனதின் சமாதி. இவ்வாறான விருத்தியடைந்த மனதினை ஏற்படுத்துவதற்கு உறுதுணையாக இருப்பது தான் சீலம். சீலத்தை அனுஷ்டிப்பவர் இவ்வனைத்திற்கும் பிண்ணணியாக, கர்மம்தான் உள்ளது என்பதை நன்கு அறிவார். அதனால் அவர் தீமையானவற்றை, பாவங்களை செய்ய பயப்படுவார். அந்த அகுசல்களை (தீமையான கர்மங்களை) செய்யாமல் அதனிலிருந்து விடுபட பலத்த முயற்சி எடுப்பார். தன் மீது தனக்கு பாசம் இருக்கும் யாரும் தான் அணிந்திருக்கும் ஆடையை தீயால் எரிய விட்டு பார்த்து கொண்டிருக்கமாட்டார்கள். அதனை முயற்சி செய்து அனைத்து விடுவார்கள். அதேபோல் தான் மனதில் அகுசல் தோன்றும் போது விரைவாக அதனை அழித்து விட வேண்டும். அதற்காக ஞானத்தை விருத்தி செய்து கொள்வதற்கான யதார்த்தத்தை உய்த்துணரும் வண்ணம் அறிவால் ஆராய வேண்டும்.

ரூப (உருவம்)ஸ்கந்தம் என்றால் பட்டவி, ஆபோ, தேஜோ, வாயோ எனும் நான்கு மகா இயற்கை தாதுக்களால் உருவாக்கப்பட்டவை. பட்டவி தாது எனும் போது நாம் நினைக்க வேண்டியது கடினமான இயல்பை கொண்டவையே. முடி, மயிர், பற்கள், தசைகள், நரம்புகள் போன்றவை பட்டவி தாதுக்களாகும். ஆபோ தாது என்பது வடியும் இயல்பினை கொண்டவை. பித்தம், சளி, சலம், இரத்தம் போன்றவை ஆபோ தாதுவாகும். தேஜோ தாது என்பது வெப்பமான இயல்பாகும். வாயோ

தாது என்பது காற்றோடு கலந்து விடும் இயல்பினை கொண்டவையாகும்.

இப்போது மனதினால் உங்களை பாருங்கள். அந்தந்த தேவையின் பொருட்டு உங்கள் சிந்தனையை கொண்டு செல்லுங்கள். கண்ணை பற்றி கூறும் போது கண் தொடர்பாக அறிவினால் ஆராயுங்கள். உடம்பை பற்றி சொல்லும் போதும் அப்படியே!

**சத்தியத்தை உய்த்துணர்வோம்.**

இந்த உடலில் பட்டவி தாது உள்ளது. பட்டவி தாது காரணங்களால் உருவாகியதாலும் மாற்றத்திற்குள்ளாவதாலும் அநித்தியமானது... அநித்தியமானது...அநித்தியமானது...இந்த பட்டவி தாது நான் அல்ல...எனது அல்ல...என்னுடைய ஆத்மாவல்ல...

இந்த உடலில் ஆபோ தாது உள்ளது. ஆபோ தாது காரணங்களால் உருவாகியதாலும் மாற்றத்திற்குள்ளாவதாலும் அநித்தியமானது... அநித்தியமானது...அநித்தியமானது...இந்த ஆபோ தாது நான் அல்ல...எனது அல்ல...என்னுடைய ஆத்மாவல்ல...

இந்த உடலில் தேஜோ தாது உள்ளது. தேஜோ தாது காரணங்களால் உருவாகியதாலும் மாற்றத்திற்குள்ளாவதாலும் அநித்தியமானது... அநித்தியமானது...அநித்தியமானது...இந்த தேஜோ தாது நான் அல்ல...எனது அல்ல...என்னுடைய ஆத்மாவல்ல...

இந்த உடலில் வாயோ தாது உள்ளது. வாயோ தாது காரணங்களால் உருவாகியதாலும் மாற்றத்திற்குள்ளாவதாலும் அநித்தியமானது...

அநித்தியமானது...அநித்தியமானது...இந்த வாயோ தாது நான் அல்ல...எனது அல்ல...என்னுடைய ஆத்மாவல்ல...

இந்த கண்கள் காரணங்களால் உருவாகியதாலும் மாற்றத்திற்குள்ளாவதாலும் அநித்தியமானது... அநித்தியமானது...அநித்தியமானது....இந்த கண்கள் நான் அல்ல...எனது அல்ல...என்னுடைய ஆத்மாவல்ல...

கண்களுக்கு தெரியும் உருவங்கள் காரணங்களால் உருவாகியதாலும் மாற்றத்திற்குள்ளாவதாலும் அநித்தியமானது...அநித்தியமானது... அநித்தியமானது...இந்த கண்களுக்கு தெரியும் உருவங்கள் நான் அல்ல...எனது அல்ல...என்னுடைய ஆத்மாவல்ல...

கண்களில் தோன்றும் சக்கு விஞ்ஞானயமானது காரணங்களால் உருவாகியதாலும் மாற்றத்திற்குள்ளாவதாலும் அநித்தியமானது... அநித்தியமானது...அநித்தியமானது...இந்த சக்கு விஞ்ஞானயம் நான் அல்ல...எனது அல்ல...என்னுடைய ஆத்மாவல்ல..

கண்களும் உருவமும் சக்கு விஞ்ஞானயமும் ஒன்று சேர்வது, காரணங்களால் உருவாகியதாலும் மாற்றத்திற்குள்ளாவதாலும் அநித்தியமானது... அநித்தியமானது...அநித்தியமானது...இந்த கண்களும் உருவமும் சக்கு விஞ்ஞானயமும் ஒன்று சேர்வது நான் அல்ல...எனது அல்ல...என்னுடைய ஆத்மாவல்ல...

கண்களும் உருவமும் சக்கு விஞ்ஞானயமும் ஒன்று சேர்வதால் தோன்றிய

அனுபவிப்பானது காரணங்களால் உருவாகியதாலும் மாற்றத்திற்குள்ளாவதாலும் அநித்தியமானது... அநித்தியமானது...அநித்தியமானது...இந்த கண்களும் உருவமும் சக்கு விஞ்ஞானயமும் ஒன்று சேர்வதால் தோன்றும் அனுபவிப்பு நான் அல்ல...எனது அல்ல... என்னுடைய ஆத்மாவல்ல...

அனுபவிக்கும் உருவங்களை இணங்காண்பது காரணங்களால் உருவாகியதாலும் மாற்றத்திற்குள்ளாவதாலும் அநித்தியமானது... அநித்தியமானது...அநித்தியமானது...அனுபவிக்கும் உருவங்களை இணங்காண்பது நான் அல்ல...எனது அல்ல...என்னுடைய ஆத்மாவல்ல...

இணங்கண்ட உருவங்களுக்கு ஏற்றாற்போல் சிந்தனை செய்வது காரணங்களால் உருவாகியதாலும் மாற்றத்திற்குள்ளாவதாலும் அநித்தியமானது... அநித்தியமானது...அநித்தியமானது...இணங்கண்ட உருவங்களுக்கு ஏற்றாற்போல் சிந்தனை செய்வது நான் அல்ல...எனது அல்ல...என்னுடைய ஆத்மாவல்ல...

உருவத்தின் மீது ஆசை தோன்றுவது காரணங்களால் உருவாகியதாலும் மாற்றத்திற்குள்ளாவதாலும் அநித்தியமானது... அநித்தியமானது...உருவத்தின் மீது ஆசை தோன்றுவது நான் அல்ல...எனது அல்ல...என்னுடைய ஆத்மாவல்ல...

இந்த காதுகள் காரணங்களால் உருவாகியதாலும் மாற்றத்திற்குள்ளாவதாலும் அநித்தியமானது.... அநித்தியமானது...அநித்தியமானது...இந்த காதுகள் நான் அல்ல...எனது அல்ல...என்னுடைய ஆத்மாவல்ல...

காதுகளுக்கு கேட்கும் சப்தங்கள் காரணங்களால் உருவாகியதாலும் மாற்றத்திற்குள்ளாவதாலும் அநித்தியமானது...அநித்தியமானது...அநித்தியமானது...இந்த காதுகளுக்கு கேட்கும் சப்தங்கள் நான் அல்ல...எனது அல்ல...என்னுடைய ஆத்மாவல்ல...

காதில் தோன்றும் சோத்த விஞ்ஞானயம் காரணங்களால் உருவாகியதாலும் மாற்றத்திற்குள்ளாவதாலும் அநித்தியமானது... அநித்தியமானது...அநித்தியமானது...காதில் தோன்றும் சோத்த விஞ்ஞானயம் நான் அல்ல...எனது அல்ல... என்னுடைய ஆத்மாவல்ல...

காதுகளும் சப்தமும் சோத்த விஞ்ஞானயமும் ஒன்று சேர்வது காரணங்களால் உருவாகியதாலும் மாற்றத்திற்குள்ளாவதாலும் அநித்தியமானது... அநித்தியமானது...அநித்தியமானது...இந்த காதுகளும் சப்தமும் சோத்த விஞ்ஞானயமும் ஒன்று சேர்வது நான் அல்ல...எனது அல்ல...என்னுடைய ஆத்மாவல்ல...

காதுகளும் சப்தமும் சோத்த விஞ்ஞானயமும் ஒன்று சேர்வதால் ஏற்படும் அனுபவிப்பானது காரணங்களால் உருவாகியதாலும் மாற்றத்திற்குள்ளாவதாலும் அநித்தியமானது... அநித்தியமானது...அநித்தியமானது...இந்த காதுகளும் சப்தமும் சோத்த விஞ்ஞானயமும் ஒன்று சேர்வதால் ஏற்படும் அனுபவிப்பானது நான் அல்ல...எனது அல்ல... என்னுடைய ஆத்மாவல்ல...

அனுபவிக்கும் சப்தத்தை இணங்காண்பது

காரணங்களால் உருவாகியதாலும் மாற்றத்திற்குள்ளாவதாலும் அநித்தியமானது... அநித்தியமானது...அநித்தியமானது...அனுபவிக்கும் சப்தங்களை இணங்காண்பது நான் அல்ல...எனது அல்ல...என்னுடைய ஆத்மாவல்ல...

இணங்கண்ட சப்தங்களுக்கு ஏற்றாற்போல் சிந்தனை செய்வது காரணங்களால் உருவாகியதாலும் மாற்றத்திற்குள்ளாவதாலும் அநித்தியமானது... அநித்தியமானது...அநித்தியமானது...இணங்கண்ட சப்தங்களுக்கு ஏற்றாற்போல் சிந்தனை செய்வது நான் அல்ல...எனது அல்ல...என்னுடைய ஆத்மாவல்ல...

சப்தத்தின் மீது ஆசை தோன்றுவது காரணங்களால் உருவாகியதாலும் மாற்றத்திற்குள்ளாவதாலும் அநித்தியமானது...அநித்தியமானது...சப்தத்தின் மீது ஆசை தோன்றுவது நான் அல்ல...எனது அல்ல... என்னுடைய ஆத்மாவல்ல...

இந்த நாசி காரணங்களால் உருவாகியதாலும் மாற்றத்திற்குள்ளாவதாலும் அநித்தியமானது... அநித்தியமானது...அநித்தியமானது...இந்த நாசி நான் அல்ல...எனது அல்ல...என்னுடைய ஆத்மாவல்ல...

நாசியால் உணரும் மணம் காரணங்களால் உருவாகியதாலும் மாற்றத்திற்குள்ளாவதாலும் அநித்தியமானது...அநித்தியமானது... அநித்தியமானது...இந்த நாசியால் உணரும் மணம் நான் அல்ல...எனது அல்ல...என்னுடைய ஆத்மாவல்ல...

நாசியில் தோன்றும் காண விஞ்ஞானயம்

காரணங்களால் உருவாகியதாலும் மாற்றத்திற்குள்ளாவதாலும் அநித்தியமானது... அநித்தியமானது...அநித்தியமானது...இந்த நாசியில் தோன்றும் காண விஞ்ஞானயம் நான் அல்ல...எனது அல்ல...என்னுடைய ஆத்மாவல்ல...

நாசியும் மணமும் காண விஞ்ஞானயமும் ஒன்று சேர்வது காரணங்களால் உருவாகியதாலும் மாற்றத்திற்குள்ளாவதாலும் அநித்தியமானது... அநித்தியமானது...அநித்தியமானது...இந்த நாசியும் மணமும் காண விஞ்ஞானயமும் ஒன்று சேர்வது நான் அல்ல...எனது அல்ல...என்னுடைய ஆத்மாவல்ல...

நாசியும் மணமும் காண விஞ்ஞானயமும் ஒன்று சேர்வதால் ஏற்படும் அனுபவிப்பானது காரணங்களால் உருவாகியதாலும் மாற்றத்திற்குள்ளாவதாலும் அநித்தியமானது...அநித்தியமானது... அநித்தியமானது...இந்த நாசியும் மணமும் காண விஞ்ஞானயமும் ஒன்று சேர்வதால் ஏற்படும் அனுபவிப்பானது நான் அல்ல....எனது அல்ல... என்னுடைய ஆத்மாவல்ல....

அனுபவிக்கும் மணத்தை இணங்காண்பது காரணங்களால் உருவாகியதாலும் மாற்றத்திற்குள்ளாவதாலும் அநித்தியமானது... அநித்தியமானது...அநித்தியமானது... அனுபவிக்கும் மணத்தை இணங்காண்பது நான் அல்ல...எனது அல்ல...என்னுடைய ஆத்மாவல்ல...

இணங்கண்ட மணத்திற்கு ஏற்றாற்போல் சிந்தனை செய்வது காரணங்களால் உருவாகியதாலும்

மாற்றத்திற்குள்ளாவதாலும் அநித்தியமானது... அநித்தியமானது...அநித்தியமானது...இணங்கண்ட மணத்திற்கு ஏற்றாற்போல் சிந்தனை செய்வது நான் அல்ல...எனது அல்ல...என்னுடைய ஆத்மாவல்ல...

மணத்தின் மீது ஆசை தோன்றுவது காரணங்களால் உருவாகியதாலும் மாற்றத்திற்குள்ளாவதாலும் அநித்தியமானது...அநித்தியமானது...மணத்தின் மீது ஆசை தோன்றுவது நான் அல்ல...எனது அல்ல... என்னுடைய ஆத்மாவல்ல...

இந்த நாவு காரணங்களால் உருவாகியதாலும் மாற்றத்திற்குள்ளாவதாலும் அநித்தியமானது... அநித்தியமானது...அநித்தியமானது...இந்த நாவு நான் அல்ல...எனது அல்ல...என்னுடைய ஆத்மாவல்ல...

நாவினால் உணரும் சுவை காரணங்களால் உருவாகியதாலும் மாற்றத்திற்குள்ளாவதாலும் அநித்தியமானது...அநித்தியமானது... அநித்தியமானது...இந்த நாவினால் உணரும் சுவை நான் அல்ல...எனது அல்ல...என்னுடைய ஆத்மாவல்ல......

நாவினில் தோன்றும் ஜிவ்ஹா விஞ்ஞானயம் காரணங்களால் உருவாகியதாலும் மாற்றத்திற்குள்ளாவதாலும் அநித்தியமானது... அநித்தியமானது...அநித்தியமானது...இந்த நாவினில் தோன்றும் ஜிவ்ஹா விஞ்ஞானயம் நான் அல்ல...எனது அல்ல...என்னுடைய ஆத்மாவல்ல....

நாவும் சுவையும் ஜிவ்ஹா விஞ்ஞானயமும் ஒன்று சேர்வது காரணங்களால் உருவாகியதாலும்

மாற்றத்திற்குள்ளாவதாலும் அநித்தியமானது.... அநித்தியமானது...அநித்தியமானது...இந்த நாவும் சுவையும் ஜிவ்ஹா விஞ்ஞானயமும் ஒன்று சேர்வது நான் அல்ல...எனது அல்ல...என்னுடைய ஆத்மாவல்ல...

நாவும் சுவையும் ஜிவ்ஹா விஞ்ஞானயமும் ஒன்று சேர்வதால் ஏற்படும் அனுபவிப்பானது காரணங்களால் உருவாகியதாலும் மாற்றத்திற்குள்ளாவதாலும் அநித்தியமானது...அநித்தியமானது... அநித்தியமானது...இந்த நாவும் சுவையும் ஜிவ்ஹா விஞ்ஞானயமும் ஒன்று சேர்வதால் ஏற்படும் அனுபவிப்பானது நான் அல்ல...எனது அல்ல... என்னுடைய ஆத்மாவல்ல...

அனுபவிக்கும் சுவையை இணங்காண்பது காரணங்களால் உருவாகியதாலும் மாற்றத்திற்குள்ளாவதாலும் அநித்தியமானது... அநித்தியமானது...அநித்தியமானது...அனுபவிக்கும் சுவையை இணங்காண்பது நான் அல்ல...எனது அல்ல ...என்னுடைய ஆத்மாவல்ல...

இணங்கண்ட சுவைக்கு ஏற்றாற்போல் சிந்தனை செய்வது காரணங்களால் உருவாகியதாலும் மாற்றத்திற்குள்ளாவதாலும் அநித்தியமானது...... அநித்தியமானது...அநித்தியமானது...இணங்கண்ட சுவைக்கு ஏற்றாற்போல் சிந்தனை செய்வது நான் அல்ல...எனது அல்ல...என்னுடைய ஆத்மாவல்ல....

அனுபவித்த சுவையின் மீது ஆசை தோன்றுவது காரணங்களால் உருவாகியதாலும் மாற்றத்திற்குள்ளாவதாலும் அநித்தியமானது....

அநித்தியமானது...அனுபவித்த சுவையின மீது ஆசை தோன்றுவது நான் அல்ல...எனது அல்ல...என்னுடைய ஆத்மாவல்ல...

இந்த உடல் காரணங்களால் உருவாகியதாலும் மாற்றத்திற்குள்ளாவதாலும் அநித்தியமானது.... அநித்தியமானது...அநித்தியமானது...இந்த உடல் நான் அல்ல...எனது அல்ல...என்னுடைய ஆத்மாவல்ல...

உடலால் உணரும் உடலுணர்வுகள் காரணங்களால் உருவாகியதாலும் மாற்றத்திற்குள்ளாவதாலும் அநித்தியமானது... அநித்தியமானது...அநித்தியமானது....இந்த உடலால் உணரும் உடலுணர்வுகள் நான் அல்ல...எனது அல்ல... என்னுடைய ஆத்மாவல்ல....

உடலில் தோன்றும் காய விஞ்ஞானயம் காரணங்களால் உருவாகியதாலும் மாற்றத்திற்குள்ளாவதாலும் அநித்தியமானது... அநித்தியமானது....அநித்தியமானது....இந்த உடலில் தோன்றும் காய விஞ்ஞானயம் நான் அல்ல...எனது அல்ல...என்னுடைய ஆத்மாவல்ல....

உடலும் உடலுணர்வுகளும் காய விஞ்ஞானயமும் ஒன்று சேர்வது காரணங்களால் உருவாகியதாலும் மாற்றத்திற்குள்ளாவதாலும் அநித்தியமானது... அநித்தியமானது...அநித்தியமானது...இந்த உடலும் உடலுணர்வுகளும் காய விஞ்ஞானயமும் ஒன்று சேர்வது நான் அல்ல...எனது அல்ல...என்னுடைய ஆத்மாவல்ல...

உடலும் உடலுணர்வுகளும் காய விஞ்ஞானயமும் ஒன்று சேர்வதால் ஏற்படும் அனுபவிப்பானது காரணங்களால் உருவாகியதாலும் மாற்றத்திற்குள்ளாவதாலும் அநித்தியமானது... அநித்தியமானது...அநித்தியமானது...இந்த உடலும் உடலுணர்வுகளும் காய விஞ்ஞானயமும் ஒன்று சேர்வதால் ஏற்படும் அனுபவிப்பானது நான் அல்ல... எனது அல்ல...என்னுடைய ஆத்மாவல்ல...

அனுபவிக்கும் உடலுணர்வை, இணங்காண்பது காரணங்களால் உருவாகியதாலும் மாற்றத்திற்குள்ளாவதாலும் அநித்தியமானது..... அநித்தியமானது.....அநித்தியமானது.....அனுபவிக்கும் உடலுணர்வை இணங்காண்பது நான் அல்ல....எனது அல்ல....என்னுடைய ஆத்மாவல்ல.....

இணங்கண்ட உடலுணர்விற்கு ஏற்றாற்போல் சிந்தனை செய்வது காரணங்களால் உருவாகியதாலும் மாற்றத்திற்குள்ளாவதாலும் அநித்தியமானது... அநித்தியமானது.....அநித்தியமானது....இணங்கண்ட உடலுணர்விற்கு ஏற்றாற்போல் சிந்தனை செய்வது நான் அல்ல...எனது அல்ல...என்னுடைய ஆத்மாவல்ல....

அனுபவித்த உடலுணர்வின் மீது ஆசை தோன்றுவது காரணங்களால் உருவாகியதாலும் மாற்றத்திற்குள்ளாவதாலும் அநித்தியமானது.... அநித்தியமானது...அநித்தியமானது...அனுபவித்த உடலுணர்வின் மீது ஆசை தோன்றுவது நான் அல்ல... எனது அல்ல.... என்னுடைய ஆத்மாவல்ல....

இந்த மனது காரணங்களால் உருவாகியதாலும்

மாற்றத்திற்குள்ளாவதாலும் அநித்தியமானது... அநித்தியமானது...அநித்தியமானது....இந்த மனது நான் அல்ல....எனது அல்ல...என்னுடைய ஆத்மாவல்ல....

மனதில் தோன்றும் எண்ணங்கள் காரணங்களால் உருவாகியதாலும் மாற்றத்திற்குள்ளாவதாலும் அநித்தியமானது....அநித்தியமானது... அநித்தியமானது.....மனதில் தோன்றும் சிந்தனைகள் நான் அல்ல....எனது அல்ல ....என்னுடைய ஆத்மாவல்ல....

மனதில் தோன்றும் மனோ விஞ்ஞானயம் காரணங்களால் உருவாகியதாலும் மாற்றத்திற்குள்ளாவதாலும் அநித்தியமானது... அநித்தியமானது...அநித்தியமானது...இந்த மனதில் தோன்றும் மனோ விஞ்ஞானயம் நான் அல்ல...எனது அல்ல....என்னுடைய ஆத்மாவல்ல....

மனதும் எண்ணங்களும் மனோ விஞ்ஞானயமும் ஒன்று சேர்வது காரணங்களால் உருவாகியதாலும் மாற்றத்திற்குள்ளாவதாலும் அநித்தியமானது..... அநித்தியமானது...அநித்தியமானது....இந்த மனதும் சிந்தனைகளும் மனோ விஞ்ஞானயமும் ஒன்று சேர்வது நான் அல்ல...எனது அல்ல...என்னுடைய ஆத்மாவல்ல....

மனதும் எண்ணங்களும் மனோ விஞ்ஞானயமும் ஒன்று சேர்வதால் ஏற்படும் அனுபவிப்பானது காரணங்களால் உருவாகியதாலும் மாற்றத்திற்குள்ளாவதாலும் அநித்தியமானது... அநித்தியமானது... அநித்தியமானது...இந்த மனதும் சிந்தனைகளும் மனோ விஞ்ஞானயமும் ஒன்று சேர்வதால் ஏற்படும் அனுபவிப்பானது நான் அல்ல...

எனது அல்ல... என்னுடைய ஆத்மாவல்ல...

அனுபவிக்கும் எண்ணங்களை இணங்காண்பது காரணங்களால் உருவாகியதாலும் மாற்றத்திற்குள்ளாவதாலும் அநித்தியமானது... அநித்தியமானது...அநித்தியமானது...அனுபவிக்கும் சிந்தனைகளை இணங்காண்பது நான் அல்ல...எனது அல்ல...என்னுடைய ஆத்மாவல்ல....

இணங்கண்ட எண்ணங்களுக்கு ஏற்றாற்போல் மேலும் சிந்தனை செய்வது காரணங்களால் உருவாகியதாலும் மாற்றத்திற்குள்ளாவதாலும் அநித்தியமானது...அநித்தியமானது... அநித்தியமானது...இணங்கண்ட எண்ணங்களுக்கு ஏற்றாற்போல் மேலும் சிந்தனை செய்வது நான் அல்ல...எனது அல்ல...என்னுடைய ஆத்மாவல்ல...

அனுபவித்த எண்ணங்கள் மீது ஆசை தோன்றுவது காரணங்களால் உருவாகியதாலும் மாற்றத்திற்குள்ளாவதாலும் அநித்தியமானது.... அநித்தியமானது...அனுபவித்த் எண்ணங்கள் மீது ஆசை தோன்றுவது நான் அல்ல...எனது அல்ல ...என்னுடைய ஆத்மாவல்ல....

கண் அநித்தியமானது....காது அநித்தியமானது... நாசி அநித்தியமானது....நாவு அநித்தியமானது....உடல் அநித்தியமானது...மனம் அநித்தியமானது...

உருவம் அநித்தியமானது...சப்தம் அநித்தியமானது....மணம் அநித்தியமானது...சுவை அநித்தியமானது...உடலுணர்வு அநித்தியமானது...

எண்ணங்கள் அநித்தியமானது....

கண்களினால் தோன்றும் அனுபவிப்பு அநித்தியமானது...காதுகளினால் தோன்றும் அனுபவிப்பு அநித்தியமானது...நாசியினால் தோன்றும் அனுபவிப்பு அநித்தியமானது...நாவினால் தோன்றும் அனுபவிப்பு அநித்தியமானது...உடம்பினால் தோன்றும் அனுபவிப்பு அநித்தியமானது...மனதினால் தோன்றும் அனுபவிப்பு அநித்தியமானது...இன்பமான அனுபவிப்பும் அநித்தியமானது...துன்பமான அனுபவிப்பும் அநித்தியமானது...இன்பமோ துன்பமோ அற்ற சமநோக்கான அனுபவிப்பும் அநித்தியமானது... அனுபவிக்கும் உருவங்களை இணங்காணல்.... அநித்தியமானது...அனுபவிக்கும் சப்தங்களை இணங்காணல் அநித்தியமானது....அனுபவிக்கும் மணங்களை இணங்காணல் அநித்தியமானது... அனுபவிக்கும் சுவைகளை இணங்காணல் அநித்தியமானது..... அனுபவிக்கும் உடலுணர்வுகளை இணங்காணல் அநித்தியமானது....அனுபவிக்கும் எண்ணங்களை இணங்காணல் அநித்தியமானது.....

இணங்கண்ட உருவங்களுக்கு ஏற்றாற்போல் மேலும் சிந்தனை செய்வது அநித்தியமானது....இணங்கண்ட சப்தங்களுக்கு ஏற்றாற்போல் மேலும் சிந்தனை செய்வது அநித்தியமானது.... இணங்கண்ட மணங்களுக்கு ஏற்றாற்போல் மேலும் சிந்தனை செய்வது அநித்தியமானது....இணங்கண்ட சுவைகளுக்கு ஏற்றாற்போல் மேலும் சிந்தனை செய்வது அநித்தியமானது....இணங்கண்ட உடலுணர்வுகளுக்கு ஏற்றாற்போல் மேலும்

சிந்தனை செய்வது அநித்தியமானது...இணங்கண்ட எண்ணங்களுக்கு ஏற்றாற்போல் மேலும் சிந்தனை செய்வது அநித்தியமானது....

கண் நான் அல்ல.... எனது அல்ல...என்னுடைய ஆத்மாவல்ல... காது நான் அல்ல... எனது அல்ல... என்னுடைய ஆத்மாவல்ல.... நாசி நான் அல்ல.... எனது அல்ல.... என்னுடைய ஆத்மாவல்ல.....நாவு நான் அல்ல....எனது அல்ல.... என்னுடைய ஆத்மாவல்ல.... உடம்பு நான் அல்ல...எனது அல்ல.... என்னுடைய ஆத்மாவல்ல.... மனது நான் அல்ல....எனது அல்ல ...என்னுடைய ஆத்மாவல்ல....

கண்களுக்கு புலப்படும் உருவம் நான் அல்ல.... எனது அல்ல.....என்னுடைய ஆத்மாவல்ல.... காதுகளுக்கு கேட்கும் சப்தம் நான் அல்ல.... எனது அல்ல..... என்னுடைய ஆத்மாவல்ல..... நாசியால் உணரும் மணம் நான் அல்ல... எனது அல்ல.... என்னுடைய ஆத்மாவல்ல...நாவினால் உணரும் சுவை நான் அல்ல...எனது அல்ல....என்னுடைய ஆத்மாவல்ல.... உடம்பினால் உணரும் உடலுணர்வுகள் நான் அல்ல.... எனது அல்ல ....என்னுடைய ஆத்மாவல்ல.....மனதில் எழும் சிந்தனைகள் நான் அல்ல.... எனது அல்ல........ என்னுடைய ஆத்மாவல்ல....

அனைத்துமே நிரந்தரமற்றவை... அநித்தியமானவை.... அநித்தியமானவை... அநித்தியமானவை...எல்லாம் மாற்றங்களுக்கு உட்படுபவையே.... இவ்வாறாக மாற்றமடையும் நிரந்தரமற்ற அனைத்தும் அநித்தியமானவை....இந்த

அநித்தியமானவை நான் அல்ல...எனது அல்ல... என்னுடைய ஆத்மாவல்ல...

இந்த அநித்தியத்தை உய்த்துணருவதற்காகவும் அநித்தியமானற்றிலிருந்து விடுதலையடைவதற்காகவும் இந்த அநித்திய தியானம் உபகாரமாகட்டும்.

**சாது! சாது!! சாது!!!**